# அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு மற்றும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பிலான கருத்துரை

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

சித்திரை, 2021

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) ஆட்சிமுறை மற்றும் முரண்நிலைக்கான தீர்வு போன்ற விடயங்களில் பிரதானமாக கவனம் செலுத்துகின்ற சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதுமான ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்கக் கொள்கைக் கலந்துரையாடலின் வலுவூட்டலுக்கான தேவையில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆராய்ச்சி மற்றும் வாதுரைத்தல் மூலம் அரசாங்கக் கொள்கை தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, மாற்றீடுகள் இனங் காணப்பட்டு, மற்றும் பரப்புரை செய்கின்றதுமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பற்றுறுதி கொண்டுள்ளது.

இல. 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

தொலைநகல்: +9411 2081388 Email: info@cpalanka.org

இணையத்தளம்: www.cpalanka.org

மின்னஞ்சல்: info@cpalanka.org

முகநூல்: www.facebook.com/cpasl

டுவிட்டர்:@cpasl 2

## நன்றி நவில்தல்கள்

இவ் அறிக்கையானது பவானி பொன்சேகா, குஷ்மிலா ரணசிங்க மற்றும் சார்யா சமரக்கோன் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டது. முன்னைய வரைபுகள் மீதான கருத்துக்கள் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, லூவி கணேஷதாசன், நிவேதா ஜெயசீலன் மற்றும் ஷாலெம் சுமந்திரன் ஆகியோரால் வழங்கப்பட்டது. இவ் அறிக்கை அயுத்தியா கஜநாயக்கவினால் வடிவமைக்கப்பட்டது. தகவல்களையும் நுண்ணறிவினையும் வழங்கி இவ் அறிக்கைக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நன்றி தெரிவிக்கின்றது.

## உள்ளடக்கங்கள்

அறிமுகம் .......... 5

பகுதி 1 – அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு .......... 8

பின்னணி .......... 8

சட்ட வரைச்சட்டம் மற்றும் ஏனைய விடயங்கள் .......... 15

1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம் .......... 15

ஆணை .......... 17

விசாரணை ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் மற்றும் உட்கிடைகள் .......... 20

விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலான உட்கிடைகளும் கரிசணைகளும் .......... 95

பிரிவு 2 - விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு .......... 96

சட்ட வரைச்சட்டமும் அதனோடு தொடர்புடைய விடயங்களும் .......... 96

1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம் .......... 96

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பிலான கடந்தகால முன்னெடுப்புக்கள் .......... 99

அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணை .......... 102

முடிவுரை .......... 105

## அறிமுகம்

8 தை 2015 தொடக்கம் 16 கார்த்திகை 2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழு 9 தை 2020 தேதியிடப்பட்ட 2157/44ஆம் இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நியமிக்கப்பட்டது. இவ் விசாரணை ஆணைக்குழு விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டது.[1] விசாரணை ஆணைக்குழுவிற்கு மேலும் பரந்துபட்ட அதிகாரங்களை வழங்குகின்ற வகையில் அதனுடைய ஆரம்பநிலை ஆணை 22 தை 2021 தேதியிடப்பட்ட 2159/16ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது.[2]

ஆணைக்குழு மதிப்பிற்குரிய உயர்திரு உபாலி அபேரத்ன (ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி), மதிப்பிற்குரிய உயர்திரு தயா சந்திரஸ்ரீ ஜயதிலக (ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி) மற்றும் உயர்திரு சந்திர பெர்ணாந்து ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது. விசாரணை ஆணைக்குழு ஆரம்பத்தில் ஆறு மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், ஆடி 2020 இல்[3] நான்கு மாத காலத்தினாலும், 17 கார்த்திகை 2020 இல்[4] மேலும் 16 நாட்கள் கால அளவினாலும் விசாரணை ஆணைக்குழுவின் ஆணைக்காலம் நீடிக்கப்பட்டது. இறுதி அறிக்கை சனாதிபதியிடம் 8 மார்கழி 2020[5] அன்று கையளிக்கப்பட்டது.

விசாரணை ஆணைக்குழுவினுடைய செயல் நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில், முக்கியமாக, விசாரணை ஆணைக்குழுவினால் பின்கற்றப்பட்ட விசாரணை நடைமுறை நீதியானதோ அல்லது நியாயமானதோ அல்ல, எவருக்கு எதிராக செயல் நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டனவோ அத் தரப்புகளுக்கு தகுந்த நடைமுறை உத்தரவாதங்கள் இயலச்செய்யப்படவில்லை: மற்றும் விசாரணை ஆணைக்குழுவினால் ஏற்றுப்கொள்ளப்பட்ட, தனியார் தரப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் உள்ளடங்கலாக, குறிப்பிட்ட முறைப்பாடுகள் அதனுடைய நோக்கெல்லையினை விஞ்சியிருந்தது என்கின்ற பல விதமான ஆட்சேபனைகள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது.[6]

---

1 9 தை 2020 தேதியிடப்பட்ட 2157/44 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2020/1/2157-44_T.pdf >

2 மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர் (SC FR 32 / 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/centre-for-policy-alternatives-v-attorney-general-sc-fr-32-2020/ > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

3 8 ஆடி 2020 தேதியிடப்பட்ட 2183/26 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2020/7/2183-26_T.pdf >

4 9 கார்த்திகை 2020 தேதியிடப்பட்ட 2201/05 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2020/11/2201-05_T.pdf >

5 'அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதியறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது' (*Daily News*, 8 மார்கழி 2020) < http://www.dailynews.lk/2020/12/08/local/235555/final-report-pcoi-political-victimization-handed-over-president > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

6 கிஷாலி பின்டோ-ஜயவர்தன, 'இலங்கையின் நீதி நிறுவனங்களின் மீது கடின மழையொன்று பொழிவதற்கு விதிக்கப்பட்டுள்ளது' (*The Sunday Times*, 7 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < http://www.sundaytimes.lk/210207/columns/a-hard-rain-destined-to-fall-on-sri-lankas-institutions-of-justice-431716.html > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

அதனுடைய இறுதி அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதனைத் ெதாடர்ந்து அதனால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயல் நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படாத, விசாரணை ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உருவாக்கத்தினை ஆரம்பித்து வைத்தது. விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் உருப்படி 8 இல் பட்டியலிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கலுக்காக குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் மீது, விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் தாபிக்கப்பட்டுள்ள நீதி நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளை விலத்திச் செல்கின்ற விளைவுடன்கூடிய சமூக இயலாமையினை சுமத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.[7]

விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையிலுள்ள உருப்படிகள் 9 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பிலான பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கான ஒப்புதலினைப் பெறுகின்ற நோக்கில் பிரதமர் மகிந்த ராஜபக்ச 9 சித்திரை 2021 அன்று பிரேரணை ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இப் பிரேரணை பிரதமரினால் பாராளுமன்றத்தில் இவ் வாரம் நகர்த்தப்படுவதற்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது. இம் முறைப்பாடுகளில் சம்பந்தப்பட்ட புலனாய்வாளர்கள், சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள், சாட்சிகள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை இப் பிரேரணை கோருகின்றது. நீதித்துறையின் சுயாதீனத் தன்மையினையும், சட்ட ஆட்சியினையும் சீர்குலைக்கக்கூடிய விதத்தில், நீதிமன்றத்தில் தற்போது நிலுவையிலுள்ள பல வழக்குகளை தள்ளுபடி செய்வதற்கான ஏற்புதலினையும் இது கோருகின்றது.[8]

அரசியல் பழிவாங்கல் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு மற்றும் அதனைத் தொடர்ந்து தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு பற்றிய ஒரு சுருக்கமான பகுப்பாய்வினை வழங்குவதனை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இக் கருத்துரை நோக்கமாகக் கொண்டுள்ளது. விசாரணை ஆணைக்குழுவின் முடிவுறுத்தப்பட்ட செயல் நடவடிக்கைகளும், விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற செயல் நடவடிக்கைகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டவையாகவும் சிக்கலுக்குரியவையாகவும் அமைந்துள்ளதோடு, குடிமக்களின் உரிமைகளிலும், நீதித்துறையின் சுயாதீனத்தன்மையிலும், இலங்கையின் சட்ட ஆட்சி மற்றும் சனநாயகத்திலும் பாரதூரமான உட்கிடைகளைக் கொண்டிருக்கலாம் என

[7] மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ‘அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதனைத்தொடர்ந்த செயற்பாடு தொடர்பிலான ஆரம்ப கரிசனைகள்’ இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/initial-concerns-with-the-report-of-the-commission-of-inquiry-to-investigate-allegations-of-political-victimization-and-subsequent-action/ > 28 பங்குனி 2021 அன்று அணுகப்பட்டது

[8] மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ‘அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்ற அனுமதியை நாடும் தீர்மானம் தொடர்பிலான சிறு குறிப்பு’ இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/wp-content/uploads/2021/04/Tamil-Short-Note-after-edition.pdf > 19 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கரிசணையுடன் கருத்துரைக்கின்றது. எவ்வாறிருப்பினும், விசாரணை ஆணைக்குழு மற்றும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு பற்றிய இக் கருத்துரையானது பூரணமானதல்ல என்பதனைக் கருத்திற்கொள்ள வேண்டும். இக் கருத்துரை விசாரணை ஆணைக்குழுவினதும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினதும் செயல் நடவடிக்கைகள் மற்றும் விளைவு பற்றிய உய்த்தாராயும் ஈடுபாட்டினை இயைபாக்கும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நம்புகின்றது.

இக் கருத்துரை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. கருத்துரையின் முதலாவது பகுதி அரசியல் பழிவாங்கல் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவினுடைய பின்னணி, சட்ட வரைச்சட்டம் பற்றி சுருக்கமான கண்ணோட்டத்தினையும் அதனைத் தொடர்ந்து முக்கியமான திகதிகள் மற்றும் அதனுடைய செயல் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தன்மையினை அடையாளப்படுத்தும் காலவரிசையினையும், முக்கியமான பரிந்துரைகள் மற்றும் உட்கிடைகளை பட்டியலிடுகின்ற அட்டவணையினையும் வழங்குகின்றது. கருத்துரையின் இரண்டாவது பகுதி விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினை பரிசீலனை செய்கிறது. பல கடந்த கால விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் முன்னெடுப்புக்களை மேற்கோள் காட்டி விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் சட்ட வரைச்சட்டத்தின் உருக்கோடு ஒன்றினையும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய செயல் நடவடிக்கைகளின் ஆணையினையும் இது உள்ளடக்குகின்றது.

## பகுதி 1 – அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு

பகுதி 1 விசாரணை ஆணைக்குழுவினுடைய பின்னணியினை பகுப்பாய்வு செய்வதுடன் அதனுடைய செயல் நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கியமான முன்னேற்றங்கள் பற்றிய காலவரிசையினையும் வழங்குகின்றது. இதனுடைய பரந்துபட்ட ஆணை, சுயாதீனமற்ற தன்மை மற்றும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சட்ட செயல் நடவடிக்கைகள் மற்றும் புலன்விசாரணைகள் மீதான இதனுடைய உட்கிடைகள் உள்ளடங்கலாக, முடிவுறுத்தப்பட்ட செயல் நடவடிக்கைகளிலுள்ள சிக்கல்களை சுட்டிக்காட்டுவதற்காக விசாரணை ஆணைக்குழுவின் சட்ட வரைச்சட்டம், ஆணை மற்றும் முக்கிய பரிந்துரைகள் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்தினையும் இப் பகுதி உள்ளடக்கியுள்ளது.

### பின்னணி

அரசியல் எதிராளிகளினைக் குறிவைப்பதற்காகவும் பொறுப்புக்கூறல் அழைப்புக்களிலிருந்து கவனத்தை திசை திருப்பவும், சாட்சியங்களை உருக்குலைக்கவும் சனாதிபதி ஆணைக்குழுக்கள் கடந்த காலங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை நீதித்துறை செயல் நடவடிக்கைகளையும், பொலிஸ் புலன்விசாரணைகளையும் தாமதப்படுத்தியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் சாட்சிகளை அதிகரித்த ஆபத்துக்கும் உள்ளாக்கியும் உள்ளது.[9] மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் ஊழலுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதில் முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் வழக்குத் தொடரலில் சென்று முடியவில்லை.[10] பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச சமூகம் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரால் அவற்றினுடைய சுயாதீனமற்றதன்மை காரணமாக முன்னைய சனாதிபதி ஆணைக்குழுக்களும்[11] விமர்சிக்கப்பட்டன.

உதாரணமாக, 2006 இல் தாபிக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலன்விசாரணை செய்யவும் விசாரிப்பதற்குமான விசாரணை ஆணைக்குழுவினை

---

[9] சர்வதேச மன்னிப்புச் சபை, 'இலங்கையின் விசாரணை ஆணைக்குழுக்கள்' (2009) இங்கே பார்வையிடலாம் < https://www.amnesty.org/download/Documents/48000/asa370052009eng.pdf > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[10] சர்வதேச மன்னிப்புச் சபை, 'புதிய லுள்ள பழைய ஆவிகள்: இலங்கையின் அச்சத்தினை நோக்கிய மீள்திரும்பல்' பக்கம் 21 இங்கே பார்வையிடலாம் < https://www.amnesty.org/download/Documents/ASA3736592021ENGLISH.PDF > 26 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[11] மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 'காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை புலன்விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு: போக்கு, நடைமுறை மற்றும் உட்கிடைகள்' (மார்கழி 2014) இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/the-presidential-commission-to-investigate-into-complaints-regarding-missing-persons-trends-practices-and-implications/ >; மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை புலன்விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு பற்றிய கருத்துரை' (பங்குனி 2014), இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/a-commentary-onthe-presidential-commission-to-investigate-missing-persons/ >

கண்காணிப்பதற்காக நிறுவப்பட்ட சிறந்த நபர்களின் சர்வதேச சுயாதீனக் குழு (IIGEP), "சர்வதேச நெறிகளுக்கும் தராதரங்களுக்கும் அமைவாக மனித உரிமை விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசியல் விருப்பம் இல்லாமை மற்றும் இலங்கையின் நிறுவன இயலாமை தொடர்பான அதனுடைய அச்சத்தினை"[12] குறித்துரைத்தது.

மேலும், இலங்கையிலுள்ள மனித உரிமைகள் நிலைமை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரினுடைய 2015 ஆம் ஆண்டு அறிக்கை[13] "மனித உரிமைகள் உயர் ஆணையாளரினுடைய அலுவலகம் (OHCHR) அதனுடைய புலன்விசாரணைகளின் போது 2006 ஆம் ஆண்டு உடலகம ஆணைக்குழு மற்றும் 2012 ஆம் ஆண்டு இராணுவ விசாரணை நீதிமன்றம் உள்ளடங்கலாக பல உள்நாட்டு விசாரணைகளின் பகிரங்கப்படுத்தப்படாத அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டது" எனத் தெரிவிக்கின்றது. "இவ் அறிக்கைகள் அவற்றினுடைய சுயாதீனமற்ற தன்மை பற்றிய மனித உரிமைகள் உயர் ஆணையாளரினுடைய அலுவலகத்தின் கரிசணைகளை உறுதிப்படுத்துகின்றன....". மனித உரிமைகள் உயர் ஆணையாளரினுடைய அலுவலகத்தினுடைய கரிசணைகள் இவ் அறிக்கை மீதான பாராளுமன்ற விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்கவினால் மனித உரிமைகள் உயர் ஆணையாளரினுடைய அலுவலகத்தின் கரிசணைகள் சுட்டிக்காட்டப்பட்டன. இதனையொத்த மேற்கோளொன்று பரணகம ஆணைக்குழு தொடர்பிலும் முன்வைக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.[14]

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மோதல்களை தோற்றுவிக்கின்ற வகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நீதிமன்ற செயல் நடவடிக்கைகளில் இடையீடு செய்வதற்கு அது தாபிக்கப்பட்டதிலிருந்து விசாரணை ஆணைக்குழு எத்தனித்து வந்துள்ளது. சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கு அழைப்பாணை விடுத்தல், ஒரு தரவுகள் கண்டறியும் அமைப்பாக[15] அதனுடைய ஆணைக்கு அப்பாற்பட்டதென்றும், இதன் காரணமாக வலிதற்றது[16] எனவும் சட்டமா அதிபர் ஆணைக்குழுவுக்கு அறிவித்தார்.

அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிய செயல்முறை மற்றும் நியாயமான வழக்காடல் உரிமைகளை தவிர்த்துச்செல்வதற்காக விசாரணை ஆணைக்குழுவின் செயல்

[12] சிறந்த நபர்களின் சர்வதேச சுயாதீனக் குழு, 'IIGEPஇனுடைய இறுதி அறிக்கை' இங்கே பார்வையிடலாம் < http://www.humanrights.asia/wp-content/uploads/2018/07/The-Final-Report-of-the-IIGEP.pdf > 5 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது
[13] 57ஆம் பந்தியின் 11ஆம் பக்கத்திலுள்ளது
[14] இலங்கை பாராளுமன்றம், ஹன்சாட் அறிக்கை (22.10.2015), இங்கே பார்வையிடலாம் < https://www.parliament.lk/uploads/documents/hansard/1446089031089971.pdf > 1014ஆம் பக்கத்தில்
[15] சுல்பிக் பர்ஸான், 'விசாரணை ஆணைக்குழு நீதி நியாயசபையல்ல, மாறாக தகவல்-கண்டறியும் அமைப்பு: AG' (*News First*, 23 ஆனி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/06/23/coi-not-a-judicial-tribunal-but-a-fact-finding-body-ag-complete-letter-to-coi/ > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது
[16] Daily Post LK, 'சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிளை அழைப்பதற்கான ஆணை அதற்கு இல்லை என அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவிற்கு AG அறிவித்தார்' இங்கே பார்வையிடலாம் < https://www.dailypost.lk/ag-tells-coi-on-political-victimisation-it-has-no-mandate-to-summon-ag-dept-officials/ > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

நடவடிக்கைகள் விமர்சிக்கப்பட்டன. விசாரணை ஆணைக்குழு தொடர்பிலான சிறப்புரிமை விடயம் பற்றி கேள்வியெழுப்பி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

"ஆணைக்குழுக்கள் முன்னர் பிரசன்னமாகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பாணைகளை காலத்துக்கு காலம் நான் பெற்றுள்ளேன். அவ் அழைப்பாணைகளில் நான் பிரதிவாதியாகப் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளேன். ஆவை சிங்கள மொழியில் இருந்த காரணத்தினால் பதிலளிப்பதற்காக தனக்கு ஆவணங்கள் வேண்டுமென்றும், அவ் விடயங்களின் ஆங்கிலத்திலிருந்தான தமிழ் மொழி பெயர்ப்பினை அனுப்பி வைக்குமாறும் அறிவித்திருந்தேன். குறித்த ஆணைக்குழுவின் முன்னர் நான் இரண்டு தடவைகள் பிரசன்னமாகி அதே கோரிக்கையினை முன்வைத்தேன். தனக்கு ஆவணங்களும் அவற்றினுடைய மொழிபெயர்ப்புகளும் வழங்கப்பட வேண்டுமென ஆணையாளர் கட்டளையிட்டார். அவ்விதமாக எதுவும் நடக்கவில்லை."[17] எனக் கூறினார்.

விசாரணை ஆணைக்குழவின் இறுதி அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நிலவிய காலதாமதம் தொடர்பில் எதிர்க்கட்சி கரிசணை எழுப்பியது. "அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தண்டனைகளைத் தீர்மானிப்பதற்கு இன்னொரு சனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு வெறுமனே மூன்று மாதங்களே அளிக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் அதனை நாம் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். அதற்கு அவ் அறிக்கையின் உள்ளடக்கங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றினை சமர்ப்பிக்காமல் விடுவதன் மூலம் நடைமுறையினைத் தாமதப்படுத்துவது நியாயமற்றது"[18] என எதிர்க்கட்சி முதற்கோலாசானும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இவ் விடயத்தினை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு தேதியொன்றினைத் குறிக்குமாறு எதிர்க்கட்சியினரால் விடுக்கப்பட்ட பல கோரிக்கைகளைத் தொடர்ந்து[19] 3 பங்குனி 2021 அன்று விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.[20]

---

[17] சமன் இந்திரஜித். 'சுமந்திரனின் சிறப்புரிமை விடயம் பாராளுமன்றத்தின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு சாற்றுப்படுத்தப்பட்டது' (*The Island*, 11 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < https://island.lk/sumanthirans-privilege-issue-referred-to-parliamentary-ethics-and-privileges-committee/ > 15 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[18] சமன் இந்திரஜித், 'ஈஸ்ரர் படுகொலை மற்றும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு வலியுறுத்து' (*The Island*, 11 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < https://island.lk/opposition-urges-govt-to-table-pcoi-reports-on-easter-carnage-and-political-victimisation/ > 15 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[19] 'அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்க தவறியமை தொடர்பில் எதிர்க்கட்சி கேள்வியெழுப்பியது' (*Colombo Gazette*, 18 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < https://colombogazette.com/2021/02/18/opposition-questions-failure-to-table-report-on-political-victimization/ > 15 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[20] சந்தசென் மாரசிங்க, 'அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு அறிக்கை சமாப்பிக்கப்பட்டது' (*Daily News*, 10 பங்குனி 2021) இங்கே பார்வையிடலாம் < http://dailynews.lk/2021/03/10/political/243600/political-victimisation-commission-report-tabled > 28 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

# 2015-2019ம் காலப்பகுதியில் நிகழ்ந்த அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு



## காலவரிசை

### 2020 தை 9

2015-2019 அரசியல் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் புலன்விசாரணை செய்வதற்கான விசாரணை ஆணைக்குழு (CoI) நியமிக்கப்பட்டது

### 2020 தை 20

மேலும் பரந்துபட்ட அதிகாரங்களை வழங்கும் வகையில் CoIஇனுடைய மூல ஆணை திருத்தப்பட்டது. முதலாவது முறைப்பாடு ஆணைக்குழுவினால் பெறப்பட்டது.

### 2020 தை 27

முன்னாள் கடற்படை கட்டளைத் தளபதி கரண்ணாகொட மற்றும் ஏனையோருக்கு எதிராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்கினைத் தொடர்ந்து முன்னெடுப்பதிலிருந்து நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தினைத் தடுக்கின்ற கட்டளையினைப் பிறப்பித்ததோடு, கடத்தல் குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட பல்வேறு கடற்படை அதிகாரிகள் மீதாக வழக்கு, பிரகீத் எக்னெலிகொடவினை கடத்திய குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளின் வழக்கு, அலி ரொஷான் என அழைக்கப்படும் நிராஜ் ரொஷான் மீதான யானை மோசடி வழக்கு உட்பட்ட CoIஇனால் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற வழக்குகள் தொடர்பான புலன்விசாரணைகளையும் வழக்குத்தொடரல்களையும் நிறுத்தும்படி சட்டமா அதிபருக்கும் (AG) அறிவித்தது.

### 2020 தை 29

மேற்கூறிய வழக்கில் தன்னுடைய நியதிச்சட்ட கடமைகளை ஆற்றாது தவிர்க்கும்படி சட்டமா அதிபருக்கு கட்டளையிட CoIஇற்கு நியதிச்சட்ட அல்லது சட்ட ரீதியான அதிகாரமில்லை என சட்டமா அதிபர் COIஇற்கு எழுத்துமூலம் அறிவித்தார்

### 2020 மாசி 7

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் (CPA) அதனுடைய நிறைவேற்றுப் பணிப்பாளரும் CoIஇற்கு வழங்கப்பட்டுள்ள பரந்துபட்ட அதிகாரங்களைக் கேள்விக்குட்படுத்தி அடிப்படை உரிமைகள் விண்ணப்பமொன்றினை பதிவு செய்தனர்.

### 2020 மாசி 17

CoIஇனுடைய அமர்வு ஆரம்பித்தது

### 2020 பங்குனி 3

அலி ரொஷான் மற்றும் ஏனைய எழுவருக்கு எதிரான யானை மோசடி வழக்கில் CoIஇனுடைய செயலாளர் பேர்ள் வீரசிங்கவிற்கு வழக்குடன் தொடர்புபட்ட புலன்விசாரணை கோப்புகள் தொடர்பில் பதில் கூற 6 பங்குனி அன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாகுமாறு நீதாயம் கட்டளையொன்றைப் பிறப்பித்தது

### 2020 பங்குனி 6

வெள்ளிக்கிழமை வீரசிங்க நீதிமன்றத்தின் முன் சமூகமளிக்கத் தவறிய போது அவருடைய கைதுக்காக நீதிமன்றம் ஆய பிடியாணை (Bench warrant) ஒன்றினைப் பிறப்பித்தது. மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஆயம் இத்தகைய இயல்பினைக் கொண்ட ஆணைக்குழுக்கள் கோருமாயின் நீதிமன்றம் செயற்பட முடியாதென்றும் இதன் காரணமாக நீதிமன்றங்களின் பணி முடக்கப்படுகின்றது எனவும் குறித்துரைத்தது.

உடனடியான எதிர்ச்செயலில் 11 பங்குனியன்று ஆணைக்குழுவின் முன் தோன்றுமாறு CoI அழைப்பாணை விடுத்தது. CoIஇனுடைய புலன்விசாரணைகள் முடிவுறுத்தப்படும் வரை வழக்கினை முன்னெடுத்துச் செல்லவேண்டாம் என ஆணைக்குழு கட்டளையிட்டுள்ள போது இந் நீதிமன்றக் கட்டளையானது எல்லை மீறுவதற்கான AGஇனுடைய உள்நோக்கத்துடனான எத்தனிப்பு என CoI தெரிவித்தது.

### 2020 ஆனிஸ்ரீ 11

நீதாயத்திற்கு முன்னரான சட்டமா அதிபரின் பணிகளை கேள்விக்குட்படுத்துவதற்கான நீதியியல் தத்துவங்களோ அல்லது அதிகாரமோ CoIஇற்கு இல்லை எனக்கூறுகின்ற எழுத்து மூலமான பதிலொன்றினை CoIஇன் முன் AGஇனை பிரதிநிதித்துவப்படுத்திய சிரேட்ட மேலதிக மன்றாடியார் நாயகம் (ASG) சரத் ஜயமான்ன PC CoIஇடம் கையளித்தார்

### 2020 ஆனி 17

Avant Garde ஆயுதக் கடத்தல் வழக்கில் அவருடைய பணிகளுக்காக சிரேஷ்ட அரச சட்டவாதி ஜனக பண்டாரவிற்கு CoI அழைப்பாணையினையும் அறிவிப்பினையும் சேர்ப்பித்தது

### 2020 ஆனி 22

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கு அழைப்பாணையோ அல்லது அறிவிப்போ விடுக்க அதற்கு ஆணை இல்லை எனவும் அத்தகைய செயல்கள் சட்டமுரணானது மற்றும் வலிதற்றது எனவும் AG COIஇற்கு அறிவித்தார்

**2020 ஆடி 8**

2183/26ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் CoIஇனுடைய காலத்தினை 4 மாதங்களினால் சனாதிபதி கோட்டாபய நீடித்தார்

**2020 ஐப்பசி 2**

அரசியல் பழிவாங்கல் நிகழ்வுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான CoI அதனுடைய முதற்கட்ட அறிக்கையினை பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் கையளித்தது.

**2020 கார்த்திகை 6**

CoIஇனுடைய செயல் நடவடிக்கைகள் ஊழல் நிறைந்தது எனக் குற்றஞ்சாட்டி ஐந்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் (CIABOC) முறைப்பாடொன்றினைப் பதிவு செய்தனர்

**2020 கார்த்திகை 7**

முறைப்பாட்டாளர்கள் மீது அவமதிப்பு குற்றஞ்சாட்டி, CIABOC முறைப்பாடுகளை நிர்வகிக்கின்ற சட்டங்களின் கீழ் சிறப்புரிமை வழங்கப்படவேண்டிய அவர்களுடைய முறைப்பாடு தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்கு பொலிஸின் முன் ஆஜராகுமாறு CoI அழைப்பாணை விடுத்தது.

**2020 கார்த்திகை 9**

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் CoIஇன் முன் அழைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக அவமதிப்பு வழக்கொன்றினை பதிவதற்கான CoIஇனுடைய தீர்மானம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

2201/5ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் CoIஇனுடைய காலத்தினை மேலதிக 16 நாட்களினால் சனாதிபதி கோட்டாபய நீடித்தார்

**2020 கார்த்திகை 28**

CoI தொடர்பிலான சிறப்புரிமை விடயம் பற்றி பா.உ. சுமந்திரன் கேள்வி எழுப்பினார் அத்தோடு தான் செயல் நடவடிக்கைகளினைத் தவிர்ப்பதாக தவறாக பெயரிடப்படலாம் எனவும் அறிவித்தார்.

**2020 மார்கழி 8**

CoIஇனுடைய இறுதி அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

**2021 தை 19**

CoIஇனுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவனை அமைச்சரவை ஒப்புதலளித்தது.

**2021 தை 29**

CoIஇனுடைய பரிந்துரைகளினை அமுல்படுத்துவற்காக விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று (SPCoI) நியமிக்கப்பட்டது.

### 2021 மாசி 10

பா.உ. சுமந்திரனின் முறைப்பாடு பாராளுமன்றத்தின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு சாற்றுப்படுத்தப்படலாம் என சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்தன அறிவித்தார்.

### 2021 மாசி 11

CoIஇனுடைய பரிந்துரைகளினை அடிப்படையாகக்கொண்டு 3 மாத காலத்திற்குள் தண்டனைகளைத் தீர்மானிப்பதற்கு வேறொரு SPCoI நியமிக்கப்பட்டிருப்பதனை சுட்டிக்காட்டி CoIஇனுடைய அறிக்கையினை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்குமாறு SJB அரசாங்கத்திடம் கூறியது.

### 2021 மாசி 18

எதிர்க்கட்சியின் மீண்டும் மீண்டுமான கோரிக்கைகளை கருத்திலெடுக்காது அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தவறியமையை எதிர்க்கட்சி கேள்விக்குட்படுத்தியது.

### 2021 பங்குனி 01

CoIஇனுடைய அறிக்கையினை உடனடியாக வெளியிடுமாறு JVP அரசாங்கத்திடம் கூறியது. சனாதிபதி செயலகத்தின் தகவலதிகாரி அறிக்கையினை வழங்க முடியாது என 8 மாசி அன்று தெரிவித்ததாகவும் JVP கூறியது.

### 2021 பங்குனி 02

அரசியலமைப்பின் உறுப்புரை 105(3)இன் கீழ் CoIஇனுடைய உறுப்பினர்களுக்கு எதிராக புலன்விசாரணையினை வேண்டி உயர் நீதிமன்றத்தில் 40 SJB பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுச்செய்தனர். மனுவின் பிரகாரம் CoIஇனுடைய இறுதி அறிக்கையிலுள்ள சில பரிந்துரைகள் நீதிமன்ற அவமதிப்புக்கு சமமானவையாகும்.

### 2021 பங்குனி 07

சட்டத்தரணிகளின் கடந்தகால தலைவர்களான சிரேஷ்ட சட்டத்தரணிகள் CoIஇனுடைய அறிக்கையின் உள்ளடக்கங்கள் நாட்டிலுள்ள சட்டவாட்சியினை சீர்குலைக்கலாம், நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினை இல்லாதொழிக்கலாம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பக்கச்சார்பற்ற மற்றும் வினைத்திறனான செயற்பாட்டினை அற்றுப்போகச் செய்யலாம் என்கின்ற கடுமையான கரிசணைகளை வெறியிட்டனர்.

### 2021 பங்குனி 09

CoIஇனுடைய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

### 2021 பங்குனி 12

CPA உட்பட்ட சிவில் சமூக நிறுவனங்கள் CoIஇனுடைய கண்டறிதல்கள் தொடர்பில் கரிசணைகளை எழுப்பின.

### 2021 சித்திரை 01

1 சித்திரை 2021 தேதியிடப்பட்ட 2221/54ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் CoIஇனுடைய ஆணைக்காலம் நீடிக்கப்பட்டது.

### 2021 சித்திரை 09

CoIஇனுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான பாராளுமன்றத்தின் ஒப்புதலினை வேண்டி பிரதமர் தீர்மானமொன்றினை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

## சட்ட வரைச்சட்டம் மற்றும் ஏனைய விடயங்கள்

### 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம்

விசாரணை ஆணைக்குழு (திருத்தப்பட்ட) 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.[21] பொருத்தமான சந்தர்ப்பத்தில் புலன்விசாரணை அல்லது விசாரணை அல்லது இரண்டினையும் நடத்துவதற்கும் கீழ்வரும் தகவல்கள் திரட்டுவதற்கும் அவசியமென்று சனாதிபதிக்குத் தோன்றுகின்ற போது விசாரணை ஆணைக்குழு ஒன்றினை நியமிப்பதற்கான அதிகாரத்தினை இச் சட்டத்தின் பிரிவு இரண்டின் கீழ் சனாதிபதி கொண்டுள்ளார்.

- அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தின், ஏதேனும் நியதிச்சட்ட முறையிலான அமைப்பின், ஏதேனும் பொது அல்லது உள்ளூர் அதிகாரசபையின் அல்லது ஏனைய வேறு நிறுவனங்களின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கடமைகள்
- ஏதேனும் பொது அதிகாரியின், நியதிச்சட்ட முறையிலான அமைப்பின், ஏதேனும் பொது அல்லது உள்ளூர் அதிகாரசபை அல்லது ஏதேனும் நிறுவனத்தின் ஊழியரொருவரின் நடத்தை
- அவரது அபிப்பிராயத்தில் தேசிய நலனின் பொருட்டு அல்லது பொதுப் பாதுகாப்பு அல்லது சுகவாழ்வுக்காக ஏதேனும் விடயம் அல்லது சம்பவம்

இச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரங்கள்/தத்துவங்கள் இச் சட்டத்தின் ஏழாம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. சாட்சியங்களினை வாங்கிக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும், மற்றும் சாட்சிகளை பரீட்சிக்கவும்
2. எந்தவொரு சாட்சியினதும் சாட்சியத்தினை சத்தியப்பிரமாணத்தின் கீழ் அல்லது உறுதிப்படுத்தலின் கீழ் வழங்குமாறு தேவைப்படுத்த
3. எந்தவொரு நீதிமன்றத்திடம் அல்லது நியாய சபையிடம், அத்தகைய நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் கோப்பிடப்பட்டுள்ள அல்லது பதியப்பட்டுள்ள பொருள்வகைகளினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ள
4. அவரது உடமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தினை அல்லது வேறு ஏதேனும் பொருள்வகையினை முன்வைக்குமாறு எவரேனும் நபரினைத் தேவைப்படுத்த
5. அவர் வசம் வைத்திருக்கக்கூடிய எழுத்திலுள்ள ஏதேனும் தகவலினை வழங்குமாறு எவரேனும் நபரினைத் தேவைப்படுத்த
6. சாட்சியம் வழங்க அல்லது ஏதேனும் ஆவணத்தினை அல்லது அவரது உடமையிலுள்ள வேறு பொருட்களினை முன்வைக்க, மற்றும் அவரை சாட்சியொன்றாகப் பரீட்சிக்க ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு சமூகமளிக்கும்படி இலங்கையில் வசிக்கின்ற எவரேனும் நபரினை அழைக்கலாம்.

[21] 1948ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம் இங்கே பார்வையிடலாம்: < https://www.lawlanka.com/lal/consolidationFullView?selectedAct=1981Y1V8C&searchPage=false >

7. சான்றுக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் குடியியல் மற்றும் குற்றவியல் செயல் நடவடிக்கைகளில் அனுமதிக்கப்பட முடியாத ஏதேனும் சாட்சியங்களினை அனுமதிப்பதற்கு
8. விசாரணைகளில் பொதுமக்களினை அனுமதிக்க அல்லது தவிர்க்க மற்றும் விசாரணைகளில் பத்திரிகைகளை அனுமதிக்க அல்லது தவிர்க்க
9. விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள அல்லது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள விடயத்தில் ஏதேனும் விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள எவரேனும் நபருக்கு இவ் விசாரணையின் நிமித்தம் ஏற்பட்ட செலவீனத்திற்கான பணத்தினை வழங்குமாறு பரிந்துரைக்க
10. விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள அல்லது விசாரணைக்குட்படுத்துவற்கு விசாரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள விடயத்தில் ஏதேனும் விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள எவரேனும் நபர் தொடர்பில் எடுக்கப்படவேண்டும் என அது கருதுகின்ற நடவடிக்கை சம்பந்தமாக தொடர்புடைய ஒழுக்காற்று அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ள

ஆணைக்குழு கோரிக்கை விடுக்கின்ற போது நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றிற்கு கீழ்வரும் அதிகாரங்கள் சனாதிபதியினால் இச் சட்டத்தின் பிரிவு 8இன் கீழ் வழங்கப்படமுடியும்.

1. இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியின் முகாமையாளருக்கு
   விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள எவரேனும் நபர் அல்லது அத்தகைய நபரின் வாழ்க்கைத் துணை அல்லது குழந்தை தொடர்பான பதிவுகளைக் கொண்டுள்ள வங்கியின் ஏதேனும் ஆவணங்களை எழுத்திலறிவிப்பதன் மூலம் கோருவதற்கான அதிகாரம்
2. இலங்கையிலுள்ள ஏதேனும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள எவரேனும் நபர் அல்லது அத்தகைய நபரின் வாழ்க்கைத் துணை அல்லது குழந்தையின் விவகாரங்கள் தொடர்பில் ஆணையாளர் நாயகத்திடமுள்ள தகவல்களை எழுத்திலறிவிப்பதன் மூலம் கோருவதற்கான அதிகாரம்

பிரிவுகள் 10, 11 மற்றும் 12 இன் கீழ் ஆணைக்குழுவிற்கு எதிரான அவதூறு அல்லது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அழைப்பாணையிற்கு இணங்கத் தவறுதல் அரசியலமைப்பின் உறுப்புரை 105(3) இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படக்கூடியவை. நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாது தவிர்க்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரிவு 18இற்கு அமைவாக ஆணைக்குழு உறுப்பினர் எவருக்கும் எதிராக குடியியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்பட முடியாது.

## ஆணை

2157/44ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தை 9ஆம் திகதியன்று அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. 22 தை 2021 தேதியிடப்பட்ட 2159/16ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அதனுடைய ஆரம்பநிலை ஆணை திருத்தப்பட்டது.

விசாரணை ஆணைக்குழுவின் ஆணை கீழ்வருமாறு,

8 தை 2015 தொடக்கம் 16 கார்த்திகை 2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற அரசியல் பழிவாங்கல்கள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கு மற்றும் தகவல் திரட்ட, குறிப்பாக,

அ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிஸின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) மற்றும் விசேட புலன்விசாரணைகள் பிரிவு (SIU) என்பனவற்றின் நிர்வாகம் தொடர்பில் பொருத்தமான ஏதேனும் ஒழுங்கீனமான செயல்கள், முறைகேடுகள், தகவிணக்கமின்மை இடம்பெற்றிருந்ததா அல்லது முறையான விவேகம், நெறிகள், வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் அலட்சியம் செய்யப்பட்டனவா

ஆ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிஸின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) மற்றும் விசேட புலன்விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் புலன்விசாரணைகள் ஏதேனும் இழப்பை, சேதங்களை, காயங்களை அல்லது குந்தகத்தினை எவரேனும் நபருக்கு நேரடியாக அல்லது கணிப்பினடிப்படையில் ஏற்படுத்தும் வகையில் செல்வாக்குச் செலுத்தப்பட்டதா அல்லது தடைப்படுத்தப்பட்டதா அல்லது தடுக்கப்பட்டதா

இ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிஸின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) மற்றும் விசேட புலன்விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்ட புலன்விசாரணைகளை முன்னெடுக்கும் கடமையிலமாத்தப்பட்ட எவரேனும் அதிகாரி ஊழலுக்கு எதிலான செயற்குழு உள்ளிட்ட மூன்றாம் தரப்புகளின் தகாத செல்வாக்கின் கீழ் செயற்பட்டனரா

ஈ) எவரேனும் நபரொருவர் ஏதேனும் அரசியல் பழிவாங்கல், அதிகார துஷ்பிரயோகம் அல்லது தவறான பயன்படுத்துகை, ஊழல் செயலொன்றினைப் புரிந்துள்ளாரா அல்லது ஊழலுக்கு எதிரான செயற்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), இலங்கை பொலிஸின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) மற்றும் விசேட புலன்விசாரணைகள் பிரிவு (SIU) ஆகியவற்றின் பணிகள் தொடர்பில் அல்லது ஏதேனும் சட்ட நிர்வாகம் அல்லது நீதி வழங்கல் தொடர்பில் ஏதேனும் செயல் மோசடிகளினைப்

புரிந்துள்ளாரா மற்றும் விசாரணை செய்யப்பட்ட ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளினை மேற்கொள்வதற்கும்.[22]

குறித்த விசாரணை ஆணைக்குழுவின் மூல ஆணையானது 22 தை 2020 திகதியிடப்பட்ட 2159/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டது. மேற் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிலான அதிகார துஷ்பிரயோகம் அல்லது தவறான பயன்படுத்துகை மற்றும் அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்களுக்கு மேலதிகமாக, குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் செயல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்துவதற்கான தத்துவம் இவ் விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பினை மற்றும் அல்லது பொது சேவையினைப் பாதகமான முறையில் பாதிக்கின்ற விதத்தில் முப்படைகள், இலங்கை பொலிஸ் மற்றும் பொதுச்சேவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள், புலன்விசாரணைகள் மற்றும் சட்ட நடைமுறைகளில் ஏற்படுத்தப்பட்ட தப்பபிப்பிராயங்களைத் தடுப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளினை உடனடியாக எடுப்பதற்கும் விசாரணை ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.[23] விசாரணை ஆணைக்குழுவிற்கு திருத்தப்பட்ட ஆணையினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட உட்பிரிவு (உ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு

> ‘‘ஆணைப்பத்திரத்தில் மேற்கோளிடப்பட்டுள்ள புலன்விசாரணைப் பிரிவினால் முதன்முதலில் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலான புலன்விசாரணைகளை உறுதிப்படுத்த மற்றும் அதனைத் தொடர்ந்து அவற்றின் மீதான புலன்விசாரணைகளை ஆரம்பிக்கவும் மற்றும் தேசியப்பாதுகாப்பினைப் பாதிக்கின்ற விதத்தில் முப்படைகள் மற்றும் இலங்கை பொலிஸ் அதிகாரிகள் தொடர்பிலான முறைப்பாடுகள் மற்றும் மூன்றாம் தரப்பொன்றினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக சட்ட நிர்வாகம் அல்லது நீதி வழங்கல் பணியில் உள்ள சில நபர்கள் மீது தப்பபிப்பிராயத்தினைத் தோற்றுவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள், புலன்விசாரணைகள், மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகளின் தொடர்பில், மற்றும் தேசியப் பாதுகாப்பினைப் பாதிக்கின்ற வகையில் முப்படைகள், இலங்கை பொலிஸ் மற்றும் பொது சேவை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள், புலன்விசாரணைகள், மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகளின் தொடர்பிலான விடயங்கள், மற்றும் / அல்லது ஏதேனும் விதத்திலான தப்பபிப்பராயத்தினை தோற்றுவிப்பதாகக் கருதப்படுகின்ற விடயங்கள் மற்றும் தப்பபிப்பிராயம் ஏற்படுத்தப்படுவதனையும், தேசியப் பாதுகாப்பும் பொது சேவையும்

[22] 9 தை 2020 தேதியிடப்பட்ட 2157/44 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2020/1/2157-44_T.pdf >

[23] 22 தை 2020 தேதியிடப்பட்ட 2159/16 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2020/1/2159-16_T.pdf >

பாதகமான முறையில் பாதிக்கப்படுவதனைத் தடுப்பதற்காகவும் அவசியடமான உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்காகவுமான"[24]

அதிகாரத்தினை வழங்குகின்றது

விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள இப் பரந்த அடைவுடைய மற்றும் பரந்துபட்ட அதிகாரங்கள்/தத்துவங்கள், (திருத்தப்பட்ட) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விசாரணை ஆணைக்குழு ஒன்றுக்கு சட்டப்படி வழங்கப்படக்கூடிய அதிகாரங்களின்/தத்துவங்களின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இத் தத்துவங்களை/அதிகாரங்களைக் கேள்விக்குட்படுத்தி அடிப்படை உரிமைகள் விண்ணப்பமொன்றினை மேற்கொண்டுள்ளனர்.[25] எவரேனும் நபரொருவர் நியாயமற்ற முறையில் புலன்விசாரணைக்கும் வழக்குத்தொடரப்படலுக்கும் உட்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான பாதுகாப்பினை சட்டம் ஏற்கனவே வழங்குகின்றது எனவும், விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள்/அதிகாரங்கள் தாபிக்கப்பட்டுள்ள சட்டக்கட்டமைப்புக்கு வெளியே செயற்படும் எனவும், இது குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் பாரதூரமான தப்பபிப்பிராயத்தினை ஏற்படுத்தும் எனவும், பல வருடங்களாகத் தொடரப்பட்டுக்கொண்டிருக்கின்ற வழக்குகளினை மேலும் தாமதப்படுத்தும் எனவும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தன்னுடைய தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ளது. விசாரணை ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள பரந்துபட்ட அதிகாரங்கள் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அதிகார வேறாக்கல் மற்றும் சட்டவாட்சியினையும் மீறுவதோடு, அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) இன் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையினையும் மீறுகின்றது.[26]

---

24 மேற்குறிப்பிட்டது

25 மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர் (SC FR 32 / 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.cpalanka.org/centre-for-policy-alternatives-v-attorney-general-sc-fr-32-2020/ > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

26 மேற்குறிப்பிட்டது

## விசாரணை ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் மற்றும் உட்கிடைகள்

| பின்னணி | விசாரணை ஆணைக்குழுவின் பிரதானமான பரிந்துரைகள் | உட்கிடைகள் |
|---|---|---|
| **1. ஊழலுக்கு எதிரான செயற்குழுவிற்கு எதிரான முறைப்பாடு**<br>**சாட்சி:**<br>**விஜேதாச ராஜபக்ச** | | |
| பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பிரதிவாதிகளாக இம் முறைப்பாட்டில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளனர். அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு தொடர்பில் சிறப்புரிமை விடயம் பற்றி 28 கார்த்திகை 2020 இல் பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.[27] இவ் விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து அழைப்பாணைகளை தான் சிங்கள மொழியில் பெற்றுக்கொண்டதாகவும், மொழிபெயர்ப்புக்கான தன்னுடைய மீண்டும் | ஊழலுக்கு எதிரான செயற்குழுவிற்கு எதிரான முறைப்பாடுகளின் பிரதிவாதிகளிற்கு எதிராக புலன்விசாரணைகளை மேற்கொள்ளவும் தண்டனைகளை விதிக்கவும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை தாபிக்குமாறு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று[29] 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் 29 தை 2021 அன்று நியமிக்கப்பட்டது.<br><br>குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டவாகள் மீது சமூக இயலாமையினை சுமத்துவதனை |

[27] சமன் இந்திரஜித். ‘சுமந்திரனின் சிறப்புரிமை விடயம் பாராளுமன்றத்தின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு சாற்றுப்படுத்தப்பட்டது’ (*The Island*, 11 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < https://island.lk/sumanthirans-privilege-issue-referred-to-parliamentary-ethics-and-privileges-committee/ > 15 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[29] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_E.pdf >

| | | |
|---|---|---|
| மீண்டுமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். தான் பிரதிவாதி என விழிக்கப்பட்டிருந்த காரணத்தினால் தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான ஆவணங்களை வழங்குமாறு கோரியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும், இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிப்பதற்கு ஆணைக்குழுவிடமிருந்து எந்தவொரு ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை.[28] | | பரிந்துரைப்பதற்கான அதிகாரத்தினை ஆணைக்குழ கொண்டுள்ளது.[30]<br><br>தன்னுடைய அதிகாரிகள் விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படுவது தொடர்பிலும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற குற்றவியல் வழக்குகள் தொடர்பில் கேள்விக்கு உட்படுத்தப்படுவது தொடர்பிலும் சட்டமா அதிபர் எதிர்ப்பினைத் தெரிவித்திருப்பது கரிசனையினைத் தோற்றுவிப்பதாக அமைகின்றது. தகவல்களைக் கண்டறிகின்ற விசாரணை ஆணைக்குழுவிற்கு முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் தலையீடு செய்வதற்கான அதிகாரமில்லை என்பதனடிப்படையில் அத்தகைய |

யனக

[28] இலங்கை பாராளுமன்றம், ஹன்சாட் அறிக்கை 28.11.2020 இங்கே பார்வையிடலாம் <https://www.parliament.lk/uploads/documents/hansard/11736_english_2020-11-28.pdf>

[30] ஷாந்தனி கிரிந்தே, 'புதிதாக நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் சமூக இயலாமைக்கு முகங்கொடுக்க வேண்டிய முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள்' (*DailyFT*, 1 மாசி 2021), இங்கே பார்வையிடலாம் <https://www.ft.lk/front-page/Members-of-previous-Govt-may-face-civil-disability-if-found-guilty-by-newly-appointed-Special-Presidential-CoI/44-712430> 1 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| | | கேள்விக்குட்படுத்தல்களை சட்டமா அதிபர் எதிர்த்தார்.[31] |
| **2. "காணாமல் போன பதினொருவர்" வழக்கு தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் - முறைப்பாட்டு இலக்கங்கள் 01/2020, 02/2020, 03/2020 மற்றும் 05/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**அட்மிரல் வசந்த கரன்னாகொட**<br>**ரியர் அட்மிரல் D.K.P. தசநாயக்க**<br>**கட்டளைத்தளபதி சுமித் ரணசிங்க** | | |
| இம் முறைப்பாடானது 25 ஆவணி 2008 இற்கும் 21 பங்குனி 2009 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொட்டஹேன மற்றும் அதன் சுற்றுப்புர பகுதிகளிலிருந்து 11 நபர்கள் கடத்தப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணைகள் தொடர்பானது. நீடித்த புலன்விசாரணைகளின் பின்னர் நிரந்தர மேல் நீதிமன்ற நீதாயத்தில் வழக்கொன்று இறுதியாகப் பதிவு செய்யப்பட்டது. சாட்சிகள் | 11 நபர்கள் கடத்தப்பட்டமை மற்றும் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் அவர்களுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கிலுள்ள குற்றப்பொறுப்புக்களிலிருந்து அட்மிரல் வசந்த கரன்னாகொட, ரியர் அட்மிரல் D.K.P. தசநாயக்க, கட்டளைத்தளபதி சுமித் ரணசிங்க ஆகியோர் விடுவிக்கப்பட வேண்டுமென விசாரணை | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். புலன்விசாரணைகளை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைப்பதோடு அரசியல் கூருணர்வு மிக்கன எனக்கருதப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் |

[31] கிஷாலி பின்டோ-ஜயவர்தன, 'இலங்கையின் நீதி நிறுவனங்களின் மீது கடின மழையொன்று பொழிவதற்கு விதிக்கப்பட்டுள்ளது' (*The Sunday Times*, 7 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < http://www.sundaytimes.lk/210207/columns/a-hard-rain-destined-to-fall-on-sri-lankas-institutions-of-justice-431716.html > 12 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| அச்சுறுத்தப்படுவதனையும், இக் கடத்தல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என குற்றப்பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகள் பதவி உயர்த்தப்பட்டமையினையும் இப் புலன்விசாரணைகள் குறித்து நிற்கின்றன.<br><br>திருகோணமலை கடற்படை முகாமில் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பது தொடர்பில் தனக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் புலன்விசாரணையினை மேற்கொள்வதற்கு தான் அந்த நேரத்தில் எடுக்கக்கூடிய அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தார் எனவும் உண்மையில் அவ் ஆட்கடத்தல்கள் லெப்ரினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவினாலும் அவரது கட்டளை அதிகாரத்தின் கீழிருந்த ஏனையாவர்களாலுமே முன்னெடுக்கப்பட்டது என்பதனை எண்பித்தார் எனவும் அட்மிரல் வசந்த கரன்னாகொட தன்னுடைய சாட்சியத்தில் தெரிவித்தார். இத் தகவலினை தான் பொலிஸிற்கு அறிவித்தது மட்டுமல்லாமல் முனசிங்கவினை கட்டாய விடுமுறையில் அனுப்பியிருந்தார். | ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள 1448/2020 இலக்கமிடப்பட்ட வழக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் இது பரிந்துரைக்கின்றது.<br><br>மேலும், புலன்விரசாரணையிலும் வழக்குத்தொடரலிலும் சம்பந்தப்பட்ட புலன்விரசாரணை அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் ஏனையோர் போலியான சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றங்களுக்காக தண்டனைச் சட்டக்கோவை மற்றும் இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | எதிர்காலத்தில் பக்கச்சார்பின்றி நடவடிக்கை எடுப்பதனையும் தடுக்கும்.<br><br>சட்டமா அதிபரினதும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழக்குத்தொடுநர்களினதும் சுயாதீனத்தன்மையினை பாதகமான முறையில் பாதிப்பதுடன் அரசியல் கூருணர்வு மிக்க வழக்குகள் தொடர்பில் எதிர்காலத்தில் பக்கச்சார்பின்றி நடவடிக்கை எடுப்பதனையும் தடுக்கும்.<br><br>நியமிக்கப்பட்ட குறுகிய காலத்தினுள்ளேயே இவ் வழக்கின் பரிசீலனையை இடைநிறுத்துமாறு சட்டமா அதிபருக்கு விசாரணை ஆணைக்குழு ஆலோசனை வழங்கியது. இவ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சனாதிபதியிடம் கையளிக்கும் வரை சட்டமா அதிபரோ அல்லது சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளோ சாட்சியங்களைப் பெறுவதிலிருந்து அல்லது முறைப்பாடுகள் தொடர்பில் வழக்குத் தொடர்வதிலிருந்து ஆணைக்குழு தடுத்தது. நீதிமன்றத்தின் முன்னாலுள்ள வழக்குகள் |

| | | |
|---|---|---|
| முன்னைய அரசாங்கத்தினுடைய உறுப்பினர்களை மகிழ்விப்பதற்காக சாட்சியங்களைச் சோடித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சதித்திட்டத்தின் விளைவாகவே தாம் கைது செய்யப்பட்டதாக பல சாட்சியமளித்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தெரிவித்தனர்.<br><br>அட்மிரல் கரன்னகொட மற்றும் ஏனையவர்களும் முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்களின் "அரசியல் இலக்குகளை அடைவதற்காகவும், புலம்பெயர் மக்களையும் ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் இவ் வழக்கில் சோடிக்கப்பட்டனர்" என இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது. | | தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கான சட்ட அதிகாரங்களை அது கொண்டிருக்கவில்லை என சட்டமா அதிபர் ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தார்.[32] |

[32] 'கரண்ணாகொட, திஸ்ஸாசாயக்க ஆகியோருக்கு எதிரான ஆட்கடத்தல் வழக்கனை நிறுத்துமாறு AGஇற்கு தெரிவிக்கப்பட்டது' (*Daily News*, 28 தை 2020) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2020/01/28/local/209735/%E2%80%98ag-told-halt-abduction-cases-against-karannagoda-dasanayake%E2%80%99?page=6 > 16 மாசி அன்று அணுகப்பட்டது; PCoIஇனுடைய அறிவுறுத்தல்களுக்கு இணங்க AG மறுப்பு' (*Colombo Gazette*, 28 தை 2020) இங்கே பார்வையிடலாம் < https://colombogazette.com/2020/01/28/ag-refuses-to-bow-down-to-pcoi-instructions/ > 16 மாசி அன்று அணுகப்பட்டது; 'கட்டளைகள் வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு உரிமையில்லை: AG அறிவிப்பு' (*Sri Lanka Mirror*, 29 தை 2020) இங்கே பார்வையிடலாம் < https://srilankamirror.com/news/16927-commission-has-no-right-to-give-orders-ag-notifies > 16 மாசி அன்று அணுகப்பட்டது

| 3. பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 80/2020, 55/2020, மற்றும் 107/2020<br><br>முறைப்பாட்டாளர்கள்:<br><br>லெப்ரினன்ட் கேர்ணல் பிரசாத் ஹெட்டியாராச்சி<br>கடற்படை புலனாய்வு அதிகாரி காமினி செனவிரத்ன<br>புலனாய்வு அதிகாரி பிரதீப் சமிந்த | | |
|---|---|---|
| இவ் வழக்கு பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் அவருடைய பாதுகாப்பு உத்தியோகத்தர் 2006 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பானது. இவருடைய இறப்பானது இலங்கையிலுள்ள மிதவாதிகளிற்கு பின்னடைவாக நோக்கப்பட்டதுடன் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்காண மக்கள் கொழும்பில் அணிவகுத்துச் செல்ல இட்டுச்சென்றது.<br><br>2016 இல் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்த போது கடற்படை மற்றும் இராணுவ கட்டளையதிகாரிகள் நீதிமன்றத்தின் முன் அழைக்கப்பட்டமை தொடர்பில் அப்போதைய சனாதிபதி சிரிசேன தன்னுடைய | பாராளுமன்ற உளுப்பினர் நடராஜா ரவிராஜினுடைய படுகொலை வழக்கின் சந்தேக நபர்களை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்க வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ் வழக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் இது பரிந்துரைக்கின்றது.<br><br>மேலும், இவ் வழக்கு விசாரணையில் ஈடுபட்ட புலனாய்வு அதிகாரிகள் மற்றும் சாட்சிகளுக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவை மற்றும் இலஞ்சச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இவ் வழக்கின் சாட்சிகள் தொந்தரவுக்கும் அச்சுறுத்தலுக்கும் முகங்கொடுக்க நேரிடலாம். நீதித்துறையினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை பாரியளவில் சீர்குலைப்பதாக இது அமையும். |

| | | |
|---|---|---|
| கரிசனைகளைத் தெரிவித்திருந்தார். ஒரு மாத காலம் நீடித்த வழக்கில் எடுக்கப்பட்ட ஒருமித்த தீர்மானத்தினைத் தொடர்ந்து நள்ளிரவில் வழங்கப்பட்ட யூரர்சபை தீர்ப்பு துணிபுரை அனைத்து சந்தேக நபர்களையும் விடுவித்தது. இத் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. | எடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | |
| **4. திவிநெகும திணைக்களத்தின் கீழான பல்வேறு செயற்திட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதிமோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு எதிரான முறைப்பாடு. – முறைப்பாட்டு இலக்கங்கள் 344/2020, 205/2020, 289/2020 மற்றும் 316/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**தம்மிக்க அமில் மாப்ப**<br>**நிஹால் ஜயதிலக**<br>**அமித் கித்சிறி றணவக**<br>**பந்துல திலக்சிறி** | | |
| ஊழலுக்கு எதிரான செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந் நிதிமோசடிகள் தொடர்பான புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் இழைப்பாறிய | திவிநெகும திணைக்களத்தின் கீழான பல்வேறு செயற்திட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதிமோசடி குற்றச்சாட்டுக்கள் கடுவெல நீதவான் நீதிமன்றிலுள்ள வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் | 30 கார்த்திகை 2020 அன்று திவிநெகும வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர். இக் குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதனை |

| | | |
|---|---|---|
| உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊழலுக்கு எதிரான செயற்குழுவினை உருவாக்கியுள்ளார் எனத் தெரிவித்தார்.[33]<br><br>ஊழலுக்கு எதிரான செயற்குழுவானது வழக்குப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்படவில்லை. மாறாக, முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், அம் முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு சாற்றுதல் செய்வதற்காக மட்டுமே உருவாக்கப்பட்டது என சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன் வாக்குமூலம் அளிக்கின்ற போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என பரிந்துரைக்கின்றது.<br><br>கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ் வழக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் இது பரிந்துரைக்கின்றது.<br><br>மேலும், இவ் வழக்கு விசாரணையில் ஈடுபட்ட புலனாய்வு அதிகாரிகள், சட்டத்தரணிகள், செயற்பாட்டாளர்கள், மற்றும் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவை மற்றும் இலஞ்சச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | வழக்குத்தொடுநரின் சாட்சியங்கள் எண்பிக்கத் தவறியதைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையினைத் தொடர்ந்து இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.[36]<br><br>ஊழலுக்கு எதிரான செயற்குழுவிற்கு எதிரான முறைப்பாடுகளில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை விசாரிக்கவும், தண்டனை விதிக்கவும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நிறுவப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்தது.<br><br>அதனடிப்படையில், 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டது. விசாரணை ஆணைக்குழுவின் முன்னாலுள்ள முறைப்பாடுகளின் |

[33] பாதிலா தஸிம், 'முன்னைய ஆட்சியின் போதான அரசியல் பழிவாங்கல்: ரணிலினுடைய ஊழலுக்கு எதிரான செயலகம் அரசியலமைப்புக்கு முரணானது – PCoI தலைவர்' (*Ceylon Today*, 14 ஆடி 2020) இங்கே பார்வையிடலாம் < https://ceylontoday.lk/news/political-victimisation-during-previous-regime-ranil-s-anti-corruption-secretariat-unconstitutional-pcoi-chair > 16 மாசி அன்று அணுகப்பட்டது

[36] லக்மால் சூரியகொட, 'பசில் மற்றும் ஏனைய மூவர் திவிநெகும வழக்கிலிருந்து விடுவிப்பு' (*Daily News*, 1 மார்கழி 2020) இங்கே பார்வையிடலாம் < http://dailynews.lk/2020/12/01/law-order/234916/basil-three-others-acquitted-divi-neguma-case > 3 மாசி அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக ஊழலுக்கு எதிரான செயற்குழுவினை உருவாக்குவதற்குத் தீர்மானித்த தேசிய நிறைவேற்று சபையானது ஒரு அரசியல் கூட்டணி எனவும் அது அரசியல் அமைப்புக்களின் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது எனவும் விக்கிரமசிங்க தெரிவித்தார்.[34]<br><br>இவ் வாக்குமூலத்தினைத் தொடர்ந்து, முன்னாள் பிரமதர் ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான செயற்குழுவின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு ஊழியம் வழங்கப்பட்டதா என்பது தொடர்பில் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும்படி பிரதமரின் செயலாளர் காமினி சேதர சேனரத்திற்கு ஆணைக்குழு அறிவித்தல் விடுத்தது. ஊதியம் வழங்கப்பட்ட நபர்களின் பெயர்களையும் ஆவணங்களையும் வழங்கும்படி ஆணைக்குழு அவரிடம் கோரிக்கை விடுத்தது.[35] | | பிரதிவாதிகளான ஊழலுக்கு எதிரான செயற்குழுவின் உறுப்பினர்கள் விசாரணை செய்து அறிக்கை வழங்குவதற்கும் அந் நபர் அரசியலமைப்பின் உறுப்புரை 81இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக சமூக இயலாமைக்கு உட்படுத்தப்பட வேண்டுமா இல்லையா எனப் பரிந்துரைப்பதற்கும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு ஆணையளிக்கப்பட்டுள்ளது.<br><br>விசாரணை ஆணைக்குழுவிற்கு முன்னாள் சாட்சியமளித்த பின்னர் ஊடகங்களுடன் உரையாடும் போது சனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன்னால் பிரசன்னமாகுமாறு அறிவிப்புவிடப்பட்டவர்களே அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்ட நபர்கள் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். ராஜபக்ச நிர்வாகத்தின் போது இடம்பெற்ற மோசடி மற்றும் ஊழல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும், அவசியமான தண்டனையினை |

[34] றொஷான் துஷார மற்றும் டில்ஷான் தாரக, 'அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான PCoI முன் ரணில் சாட்சியமளிப்பு' (*Daily News*, 4 புரட்டாதி 2020) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2020/09/04/local/227861/ranil-testifies-pcoi-political-victimization > 16 மாசி அன்று அணுகப்பட்டது

[35] மேற்குறிப்பிட்டது

| | | |
|---|---|---|
| | | விதிப்பதற்குமான ஆணை 2015இல் அரசாங்கத்திற்கு எனத் தெரிவித்தார்.[37] |
| **5. சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை தொடர்பிலான நிதி முறைகேடுகள் குற்றச்சாட்டு தொடர்பான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடுகள் - முறைப்பாட்டு இலக்கங்கள் 88/2020, 319/2020 மற்றும் 816/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**சத்ரசிங்ஹேகே ஜயவீர**<br>**W. விமலசேன**<br>**குணரத்ன பாஷ்வர சேனக** | | |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் முன்னாள் தலைவர் பாஷ்வர குணரத்னவும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி D.S. ஜயவீரவும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால 2016ஆம் ஆண்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். | சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பிலான நிதி முறைகேடுகள் மற்றும் பொதுச்சொத்துக்களை கையாடல் செய்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பல்வேறு நபர்கள் அவர்களுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென விசாரணை | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைப்பதாக இது அமையும். |

[37] சுல்பிக் பர்ஸான், 'PCoIஇனால் அழைப்பு விடுக்கப்பட்டவர்களே அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்ட நபர்கள் என மங்கள தெரிவிப்பு' (*News First*, 21 ஆவணி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/08/21/mangala-says-those-noticed-by-pcoi-are-the-victims-of-political-victimization/amp/ > 16 மாசி அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| முன்னைய அரசாங்கத்தின் போது சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளின் போதான 5.8 மில்லியன் ரூபா நிதி முறைகேடுகள் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. | ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மேலும், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரங்களும் மீளப்பெறப்பட வேண்டுமென பரிந்துரைக்கின்றது. சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், தலைவர் மற்றும் பதில் நிதிப் பணிப்பாளர்கள் இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆவார்கள்.<br><br>(பிரதிவாதிகள் பட்டியலிலுள்ள) பாராளுமன்ற உறுப்பினர்கள், புலன்விசாரணை அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் மீது போலியான சாட்சியங்களைச் சோடித்தமை மற்றும் ஊழல் குற்றங்களுக்காக தண்டனைச் சட்டக் கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். | |

**6. பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 545/2020**

**முறைப்பாட்டாளர்: உதய கம்மன்பில**

| | | |
|---|---|---|
| தம்மிக்க பெரேரா என்கின்ற வர்த்தகருக்கு டிஜிடல் நொமினி (Digital Nominee) நிறுவனத்தினுடைய பங்குகளினை விற்கின்ற போது இரண்டாம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிட்னி ஜயசிங்கவுடன் இணைந்து 120 மில்லியன் ரூபாவினை ஏமாற்றியதுடன் பிறிதொரு 21 மில்லியன் ரூபாவினை கையாடல் செய்தார் என 2016ஆம் ஆண்டு அமைச்சர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டப்பட்டார்.<br><br>அவுஸ்திரேலிய வர்த்தகர் பிரையன் ஷட்டிக் இற்கு சொந்தமான பங்குகளினை விற்பதற்காக ஒரு மோசடியான சட்ட அங்கீகாரத்தினைப் (Power of Attorney) பயன்படுத்தி குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வணிகப் பரிவாத்தனை இடம்பெற்றதாக முன்னாள் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய குற்றம் சுமத்தியிருந்தார்.[38] | கோட்டை நீதவான் நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில விடுவிக்கப்படவேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ் வழக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் இது பரிந்துரைக்கின்றது.<br><br>மேலும், இவ் வழக்கு விசாரணையில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், புலனாய்வு அதிகாரிகள் மற்றும் (குறித்த முதலீட்டாளர் மற்றும் அவரது துணைவியர்) உட்பட்ட சாட்சிகளுக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவை மற்றும் இலஞ்சச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை பாரியளவில் சீர்குலைப்பதாக இது அமையும். |

[38] இமேஷ் ரணசிங்க, 'அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஆணைக்குழு குற்றவாளிகளை விடுவிக்கின்றது – விஜித ஹேரத்' (*Economy Next*, 27 தை 2020) இங்கே பார்வையிடலாம் < https://economynext.com/political-victimization-commission-releasing-criminals-vijitha-herath-78257/ > 17 மாசி அன்று அணுகப்பட்டது

| **7. கார்ல்டன் விளையாட்டு வலையமைப்பினை (CSN) நிறுவுவதில் பொதுச்சொத்துக்கள் கையாடல் செய்யப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரைணகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 1963/2020 மற்றும் 1964/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**யோஷித ராஜபக்ச**<br>**ரோஹான வெலிவிட்ட** | | |
|---|---|---|
| CSNஇனால் நிதி முறைகேடுகளும் பொதுச் சொத்துக்கள் கையாடலும் புரியப்பட்டது என்கின்ற போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தான் கைது செய்யப்பட்டு 45 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்தார்.<br>CSNஇனுடைய செயற்பாடுகளில் தான் ஈடுபட்டிருக்காத போதும், ஊழலுக்கு எதிரான செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் FCIDஇனால் தான் சட்டமுரணான விதத்தில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.<br><br>முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவும் ஏனைய சிலரும் மகிந்த | CSNஇனை நிறுவுவதில் நிதி முறைகேடுகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் கையாடல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபடுத்தி குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள பல்வேறு நபர்களையும் அவர்களுக்கு எதிராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களிலுமிருந்து விடுவிக்குமாறு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>அதனடிப்படையில், கடுவெல மற்றும் கல்கிசை நீதவான் நீதிமன்றங்களில் அவருக்கு எதிராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து யோஷித ராஜபக்ச விடுவிக்கப்படவேண்டுமென விசாரைண ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும், புலன்விசாரணை அதிகாரிகளின் நடுநிலைத் தன்மையினையும் சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| ராஜபக்சவின் அரசியல் பயணத்தினை தடம்புரட்டுகின்ற திட்டமிடப்பட்ட எண்ணத்துடன் 2016 ஆம் ஆண்டின் சுதந்திர தினத்திற்கு முன்னதாக பிரதமர் மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்சவினை கைது செய்யுமாறு அழுத்தம் செலுத்தினார் என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச விசாரணை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் போது குற்றஞ்சாட்டினார்.[39] | அதேபோன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்திலுள்ள வழக்கின் குற்றப்பகிர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>அதேபோன்று, (குறுகிய காலத்திற்கு CSNஇனுடைய பணிப்பாளராக இருந்த) முன்னாள் சனாதிபதியின் ஊடக செயலாளருக்கு எதிராக கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகிர்வுப் பத்திரம் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரை செய்கின்றது.<br><br>பிரதிவாதிகள் சாட்சியங்களைச் சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இவ் | |

[39] WK பிரசாத் மஞ்சு, 'யோஷித கைதுசெய்யப்படுவதற்கு சம்பிக சதித்திட்டமிட்டார் - விஜெயதாச' (*Ceylon Today*, 11 ஆனி 2020) இங்கே பார்வையிடலாம் < https://ceylontoday.lk/news/champika-conspired-to-get-yoshitha-arrested-wijeyadasa > 17 மாசி அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| | வழக்கில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மீதும் தவறான சிறைவைப்பு குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். | |
| **8. தருணயட்ட ஹெட்டக் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி கையாடல் செய்யப்பட்டமை தொடர்பிலான குற்றச்சாட்டு தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான குற்றச்சாட்டு – முறைப்பாடுகள் இலக்கம் 432/2020 மற்றும் 433/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**நாலக கொடஹேவா**<br>**தம்மிக்க பெரேரா** | | |
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் தருணயட்ட ஹெட்டக் நிறுவனத்திற்கு நிதி அனுசரனையாக வழங்கப்பட்ட 5 மில்லியன் ரூபாவினைக் கையாடல் செய்தமை தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு எதிரான வழக்குடன் இம் முறைப்பாடு தொடர்புபட்டது. | கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பொறுப்புக்களிலிருந்து இரண்டு நபர்களையும் விடுவிக்குமாறும், அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பகிர்வுப் பத்திரத்தினை மீளப்பெறுமாறும் பரிந்துரைக்கின்றது.<br><br>இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ்/FCID அதிகாரிகள் ஊறு ஏற்படுத்தும் நோக்கத்துடன் குற்றம் தொடர்பில் போலியான | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும், புலன்விசாரணை அதிகாரிகளின் நடுநிலைத் தன்மையினையும் சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| | குற்றச்சாட்டுக்களை சுமத்தியமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக முறையே தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | |
| **9. சதொசவினால் விளையாட்டு உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 619/2020 மற்றும் 375/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**நிசாந்த ஆசிரி பெர்ணாந்து**<br>**கமிந்த ஹர்சஜித்** | | |
| சதொசவினால் விளையாட்டு உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்ட போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதி மோசடியுடன் இக் குற்றப்பொறுப்பு சம்பந்தப்பட்டது. | கொழும்பு பிரதான நீதவான நீதிமன்றத்தினால் அவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பொறுப்புக்களிலிருந்து இரண்டு முறைப்பாட்டாளர்களையும் விடுவிக்க வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மகிந்தானந்த அலுத்கம மற்றும் நலின் பெர்ணாந்துவிற்கு எதிராக கொழும்பு மேல் நிதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பகிர்வுப் பத்திரம் | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும், புலன்விசாரணை அதிகாரிகளின் நடுநிலைத் தன்மையினையும் சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| | மீளப்பெறப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரை செய்கின்றது.<br><br>மேலும், இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பொது அதிகாரிகள் மற்றும் புலன்விசாரணை அதிகாரிகள் சாட்சியங்களை சோடித்தல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. குற்றப்புலன்விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குற்றவாளியொருவருக்கு புகலிடமளித்த குற்றச் செயலுக்காக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றவாளிகளாவார்கள். | |

| **10. யானையொன்றினை நேர்மையற்ற முறையில் பதிவு செய்த குற்றச்சாட்டு தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 04/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**திலின கமகே** | | |
|---|---|---|
| 'சகுரா'' என்கின்ற யானைக்குட்டி ஒன்றினை சட்டவிரோதமாக உடமையில் வைத்திருந்தமைக்காக, அனுமதிப்பத்திரமின்றி யானைக்குட்டி ஒன்றினை உடமையில் வைத்திருந்தமை, போலியான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு சதித்திட்டமிட்டமை மற்றும் குறித்த யானைக்குட்டியினை போலியான ஆவணங்களை சமர்ப்பித்ததன் மூலம் பதிவு செய்தமை உட்பட்ட 25 குற்றங்களுக்கு முறைப்பாட்டாளர் குற்றப்பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளார்.<br><br>விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக இக் குற்றப்பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன. | (முன்னாள் நீதவானான) முறைப்பாட்டாளர் அவருக்கு எதிராக நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் இரண்டு முறைப்பாட்டாளர்களையும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உள்ள இவ் வழக்கின் குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>மேலும், இவ் வழக்குடன் தொடர்புள்ள பிரதிவாதிகள் சாட்சியங்களை சோடித்தல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சட்ட செயல் நடவடிக்கைகள் மீது இடையீட்டினை ஏற்படுத்துவதோடு நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும் சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| குறித்த விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் வசந்த சேனனாயக்கவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இவ் வழக்கு தொடரப்பட்டது. யானைக்குட்டி நீதவானின் உடமையிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டது.[40] | சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | |
| **11. துமிந்த சில்வாவினை சிறையிலிட்டமைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1969/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**துமிந்த சில்வாவிற்காக வின்சென்ட் பிரேமலால் சில்வா** | | |
| முன்னாள் சனாதிபதி ஆலோசகர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலை தொடர்பில் முறைப்பாட்டாளர் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட்டார். ஆணைக்குழுவின் தவணைக்காலம் 16 நாட்களினால் நீடிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை விசேடமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் | புதிய சாட்சியங்கள் விசாரணை ஆணைக்குழுவின் முன் சமாப்பிக்கப்பட்டுள்ளதன அடிப்படையில், முறைப்பாட்டாளர் துமிந்த சில்வாவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலான குற்றத்தீர்ப்பினையும் மரண தண்டனையினையும் மீளாய்வு செய்வதற்கு, | பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் படுகொலை வழக்கு மேல் நீதிமன்ற நீதாயத்தினால் தீர்மானிக்கப்பட்டதுடன்[41] 11 ஐப்பசி 2010 அன்று இலங்கையின் மிக உயரிய உயர் நீதிமன்றத்தினால் இத் தீர்மானம் உறுதிப்படுத்தப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் இவ் விடயமானது சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு |

[40] 'நீதவான் திலின கமகே மற்றும் ஏனைய நால்வருக்கு எதிராக குற்றப்பகர்வுப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது' (*News First*, 20 ஆடி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2019/07/20/indictments-filed-against-magistrate-thilina-gamage-and-four-others/ > 16 மாசி அன்று அணுகப்பட்டது

[41] வழக்கு இல. HC 8331/16

| | | |
|---|---|---|
| சார்பில் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டினை விசாரிப்பதற்காக சனாதிபதி வெளியிட்டார். | சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தின் அதிகரித்த எண்ணிக்கையுடனான நீதிபதிகளைக் கொண்ட நீதி ஆயத்தினைக் கோர வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>மேலும், இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் சாட்சியங்களை சோடித்தல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.<br>இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது தவறாக சிறையிலடைத்தமை குற்றத்திற்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். | சாற்றுப்படுத்தப்பட முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது.<br><br>இலங்கையின் உயர் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை சனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணை செய்வது, வெறிதாக்குவது அல்லது மாற்றுவது தொடர்பில் முன்னுதாரணம் இல்லை. இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினை பாரியளவில் சவாலுக்குட்படுத்தும்.<br><br>மேலும், ஆணைக்குழுவின் ஆணையின் நோக்கெல்லை முப்படைகளின் உறுப்பினர்களினால் அல்லது பொது உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளினை மட்டுமே உள்ளடக்கும். துமிந்த சில்வா ஆயுதப்படைகளின் உறுப்பினரோ அல்லது பொது உத்தியோகத்தரோ அல்ல. (சில்வாவினுடைய |

| | | |
|---|---|---|
| | | முறைப்பாடு அவரது தந்தையார் லால் சில்வாவினால் பதிவுசெய்யப்பட்டது).[42] |
| **12. வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபர் தப்பிச் செல்வதற்கு உதவியளித்த குற்றப்பொறுப்பு தொடர்பில் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரினை பதவியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 115/2020**<br>**முறைப்பாட்டாளர்:**<br>**பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க** | | |
| தான் அரசியல் பழிவாங்கலுக்காக இடைநிறுத்தப்பட்டதாகக் கூறி முன்னாள் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் அனுருத்த ஜயசங்கவினால் இம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாண பாடசாலை மாணவி வித்தியா கடத்தப்பட்டு, பாலியர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமாரிற்கு புகலிடமளித்தமை மற்றும் அவர் தப்பிச் செல்ல உதவியமை மற்றும் உடந்தையாக இருந்தமை ஆகிய | முறைப்பாட்டாளர் லலித் அனுருத்த ஜயசிங்க அவருக்கு எதிராக பெல்மதுள்ள நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உள்ள இவ் வழக்கின் குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களைச் சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக | லலித் அனுருத்த ஜயசிங்கவினை மீளப்பதவியிலமர்த்துவதில் எவ்விதமான சட்டரீதியான முட்டுக்கட்டையும் இல்லையெனத் தோன்றுகிறது என விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தெரிவித்தார்.[43] விசாரணை ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முன்னர் ஆவணி 2020இல் தலைவர் இவ் அவதானத்தினை மேற்கொண்டார். இவ் விடயத்தினைப் பரிசீலனை செய்து அதனுடைய சட்டவலிதுத்தன்மை குறித்து அன்றைய தினமே தெரிவிக்கவேண்டுமென்று |

[42] Medialk.com, துமிந்த சில்வாவிற்கு சுதந்திரம்: ஏழு-நீதிபதி தீர்ப்பினை சனாதிபதி ஆணைக்குழு மறுதலிக்கிறது. இங்கே பார்வையிடலாம் < https://medialk.com/english/2021/01/07/freedom-to-duminda-silva-presidential-commission-dismisses-a-seven-judge-ruling/ >

[43] சுல்பிக் பர்ஸான், 'பதவி விலக்கப்பட்ட SDIG லலித் அனுருத்தவினை மீளப்பதவியிலமர்த்துவதில் சிக்கலேதும் இல்லை: அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு கூறுகிறது' (*NewsFirst.lk*, 29 ஆவணி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/08/29/no-issue-in-re-instating-interdicted-sdig-lalith-anuruddha-says-pcoi-on-political-victimization/ > 2 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| குற்றப்பொறுப்புக்கள் சுமத்தப்பட்டு பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.<br><br>சபரகமுவ மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பணிபுரிந்த காலத்தில் பக்கச்சார்பான மற்றும் நடத்தை குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பணியிலிருந்து இடைவிலக்கப்பட்டார். இக் குற்றச்சாட்டுக்கள் 2015 தேர்தலுடன் தொடர்புடைய பல்வேறு சம்பவங்கள் மற்றும் (கஹவத்தை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சந்தேக நபரான) பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவினுடைய கைது என்பவற்றுடன் தொடர்புபடுகின்றன. | தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.<br><br>செலுத்தப்படாத சம்பள நிலுவையினை வழங்குவதோடு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயசிங்க உடனடியாகப் பதவியில் மீளமர்த்தப்படவேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் அறிவுறுத்தப்பட்டது.<br><br>எவ்வாறிருப்பினும், மேலதிக மன்றாடியார் நாயகம் ரொஹந்த அபேசூரிய, அவரினைப் பதவியில் மீளமர்த்துவது தொடர்பில் சட்டரீதியான முட்டுக்கட்டைகள் உள்ளதென தெரிவித்தார். பதவியிலிருந்து இடைவிலக்கப்பட்ட திரு. நியோமல் ரங்கஜீவவினுடைய மீளப்பதவியிலமர்த்தப்படுவதற்கான கோரிக்கையினை கருத்திலெடுத்து அத்தகைய நடவடிக்கையினை திரு. ஜயசிங்க தொடர்பில் எடுக்காமை சிக்கலுக்குரியது என ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.<br><br>தலைவரின் இக் கூற்றுக்கள், ஏற்கனவே பரந்துபட்டுக் காணப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுவின் ஆணையினையும் விஞ்சுகின்றன. இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

| **13. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 238/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**இராணுவ புலனாய்வு அதிகாரி பிரேம ஆனந்த உடலகம** | | |
|---|---|---|
| முறைப்பாட்டாளருக்கு எதிரான குற்றச்சாட்டு லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கின் சாட்சியான லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டமையுடன் தொடர்புபட்டது.<br><br>கோட்டாபய ராஜபக்சவின் பணிப்பின் பேரில் "புலனாய்வுப்பிரிவுகள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டன" என ஏற்றுக்கொள்ளும்படி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தனக்கு குறிப்புணர்த்தினார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.[44] | முறைப்பாட்டாளர் இராணுவ புலனாய்வு அதிகாரி பிரேம ஆனந்த உடலகம அவருக்கு எதிராக கல்கிசை மற்றும் கம்பஹா நீதவான் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கம்பஹா மேல் நீதிமன்றத்தில் உள்ள இவ் வழக்கின் குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சுாட்சியங்களைச் சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற புலன்விசாரணைகள் மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகள் மீது இடையூறினை ஏற்படுத்துமென்பதுடன் அரசியல் கூருணர்வு மிக்கன எனக்கருதப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் பொலிஸ் மற்றும் சட்ட அதிகாரிகள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதனையும் தடுக்கும். |

[44] சுல்பிக் பர்ஸான், 'லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் CID நீதிமன்றத்தினை தவறாக வழிநடத்தியுள்ளது: முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி' (*NewsFirst.lk*, 28 ஐப்பசி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/10/28/cid-misled-court-over-lasantha-wickrematunge-killing-ex-intelligence-officer/ > 17 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| | இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு மேலும் பரிந்துரைத்துள்ளது. | |
| **14. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினுடைய படுகொலை தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 885/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன்** | | |
| முறைப்பாட்டாளர் பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினுடைய படுகொலை தொடர்பிலானவை.<br><br>இரண்டு பிரதான சந்தேக நபர்களுடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட முடியாதவை என மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீட்டின் போது மேன்முறையீட்டு | முறைப்பாட்டாளர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் உள்ள இவ் வழக்கின் குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் | பாராளுமன்ற உறுப்பினரின் படுகொலை தொடர்பிலான புலன்விசாரணைகள் திருப்திகரமற்றது என படுகொலை தொடர்பிலான முன்னைய சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இரண்டு இராணுவ வீரர்களுக்கு எதிராக பொலிஸ் குற்றம் சுமத்தியிருந்த போதிலும் பின்னர் தங்களிடம் போதுமான சாட்சியம் இல்லை எனத் தெரிவித்திருந்தது.[45]<br><br>அரசியல் கூருணர்வுடைய விடயங்கள் தொடர்பிலான பொலிஸ் புலன்விசாரணைகள் |

[45] 'பா. உ. கொலை தொடர்பான விசாரனை 'போதுமற்றது' (பி.பி.சி சிங்களம், 16 ஆனி 2009) இங்கே பார்வையிடலாம் < https://www.bbc.com/sinhala/news/story/2009/06/090616_probe_pararajasingham > 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பிள்ளையானுக்கு எதிரான வழக்கினைத் தொடர்ந்து முன்னெடுக்கப்போவதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்தது. பிள்ளையான் மற்றும் ஏனைய சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். | ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது தவறாக சிறையிலடைத்தமை குற்றத்திற்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். | மீது அரசியல் செல்வாக்கு செலுத்தப்படுவதென்பது இலங்கையில் அடிக்கடி இடம்பெறுகின்ற விடயமாகும். தங்களுடைய கடமையில் ஈடுபடுவதற்காக புலன்விசாரணை அதிகாரிகளினை இலக்குவைப்பதும் அவர்களுக்கு எதிராக குற்றவியல் குற்றப்பொறுப்புக்களைப் பதிவுசெய்வதும் புலன்விசாரணையாளர்களின் சுயாதீனத்தன்மையினை மேலும் நெகிழ்விக்கும். |
| **15. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை கையாடல் செய்த குற்றச்சாட்டு தொடர்பான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1116/2020**<br>**முறைப்பாட்டாளர்:**<br>**ஜாலிய விக்கிரமசூரிய** | | |
| முறைப்பாட்டாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு கட்டடமொன்றினை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியினை கையாடல் செய்தமை தொடர்பிலானது. | முறைப்பாட்டாளர் (திரு. ஜாலிய விக்கிரமசூரிய) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சட்ட செயல் நடவடிக்கைகள் மீது இடையீட்டினை ஏற்படுத்துவதோடு நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும் சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| | மேலும், ஐக்கிய அமெரிக்காவினால் முறைப்பாட்டாளர் மீது விதிக்கப்பட்டுள்ள பிரயாணத் தடையினை அகற்றுவதற்கான கோரிக்கையினை முன்னெடுப்பதற்கான அவசியமான நடவடிக்கைகளினை அரசு முன்னெடுக்க வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.<br><br>இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | |

**16. சுயவேலைவாய்ப்பு சம்மேளனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதி மோசடிகள் தொடர்பான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 28/2020**

**முறைப்பாட்டாளர்:**

**மகிந்த கஹந்தகமகே**

| | | |
|---|---|---|
| முறைப்பாட்டாளர் மகிந்த கஹந்தகமகேயிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சுயவேலைவாய்ப்பு சம்மேளனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதி மோசடிகள் தொடர்பானவையாகும் | முறைப்பாட்டாளர் மகிந்த கஹந்தகமகே கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சட்ட செயல் நடவடிக்கைகள் மீது இடையீட்டினை ஏற்படுத்துவதோடு நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினையும் சீர்குலைக்கும். |

**17. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் / இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊழியர்கள் பலருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிரான முறைப்பாடு – 1091/2020, 1092/2020, 1131/2020 மற்றும் 141/2020**

**முறைப்பாட்டாளர்கள்:**

**சந்திரபால லியனகே**
**சனத் பிரியந்த தலுவத்த**
**விமலசேன ரூபசிங்க**

| | | |
|---|---|---|
| இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. சந்திரபால லியனகே, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் விமலசேன மற்றும் பலர் முறைப்பாட்டாளர்களாக உள்ளனர். நிதி மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் முறைப்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். | இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய பல நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது ஊழல் குற்றத்திற்காக இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால், முறைப்பாட்டாளர்களுக்கு எதிரான இலஞ்சம் அல்லது ஊழல் புலன்விசாரணையினை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளைப் பதிவதில் ஈடுபட்டவர்கள் மீது அச்சுறுத்தலினைத் தொற்றுவிக்கும் விளைவினைக்கொண்டிருக்கலாம். |

**18. அவன்ட் கார்ட் (Avant Garde) சர்ச்சை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 402/2020, 206/2020 மற்றும் 50/2020**

**முறைப்பாட்டாளர்கள்:**

**சமனசிறி திசாநாயக்க**

| **தமயந்தி தயாரத்ன**<br>**நிசங்க சேனாதிபதி** | | |
|---|---|---|
| நல்லாட்சி அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட எதேச்சையதிகாரமான மற்றும் அரசியல் நோக்கங்கள் நிறைந்த தீர்மானங்களினால் தன்னுடைய கம்பனிகள் குழுமம் பாரிய இழப்புக்களை எதிர்கொண்டுள்ளது எனக்கோரி Avant Garde Maritime Services Ltd. நிறுவனத்தின் தவிசாளர் ஓய்வுபெற்ற மேஜர் நிசங்க சேனாதிபதியினால் இம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.[46]<br><br>தவிசாளர் ஓய்வுபெற்ற மேஜர் நிசங்க சேனாதிபதி ஒரு பொது உத்தியோகராக இல்லாத போதும் கூட Avant Garde தவிசாளருடைய முறைப்பாடு அதனுடைய ஆணைக்குட்பட்டது என விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என | MV Avant Garde கப்பலினை பொறுப்பேற்ற சம்பவம் தொடர்பில் கடற்படைத் கட்டளைத் தளபதி ரவீந்திர விஜேகுணவர்த்தன மீது கிளர்ச்சிக்கு உடந்தை அளித்தமை குற்றத்திற்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்படவேண்டும் என விசாரணை ஆணைக்குழு தாபித்தது.<br><br>(Avant Garde நிறுவனத்தின் தவிசாளர்) நிசங்க சேனாதிபதி உட்பட்ட பல முறைப்பாட்டாளர்களை காலி நீதவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உள்ள இவ் வழக்கின் | அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணை ஆணைக்குழுவின் அழைப்பாணைகளை வலிதற்றதாக்கவேண்டுமெனக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்கவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவும் இரண்டு நீதிப்பேராணை மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பதிவு செய்தனர். முன்னைய அரசாங்கத்தின் போது இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் பொது உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் புலன்விசாரணைகளை மேற்கொள்ளவதற்கான அதிகாரங்கள் மட்டுமே விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது என இம் மனுக்களில் தெரிவித்துள்ளனர்.[50] |

[46] ஸ்கந்த குணசேகர, 'அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி ஆணைக்குழு: நல்லாட்சி அமைச்சர்களை அம்பலப்படுத்தும் விஜேதாச' (*The Morning*, 18 ஆனி 2020, இங்கே பார்வையிடலாம் <https://www.themorning.lk/presidential-commission-on-political-victimisation-wijeyadasa-exposes-yahapalana-ministers/> 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[50] சுல்பிக் பர்ஸான், 'Avant Garde முறைப்பாட்டினை விசாரிப்பதற்கு PCoIஇற்கு அதிகாரமில்லை, AKD மற்றும் ஷானி A தெரிவிப்பு' (*News First*, 11 ஆடி 2020), இங்கே பார்வையிடலாம் <https://www.newsfirst.lk/2020/07/13/pcoi-has-no-power-to-examine-avant-garde-complaint-says-akd-and-shani-a/> 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது.

| | | |
|---|---|---|
| விசாரணை ஆணைக்குழுவின் தவிசாளர் உபாலி அபேரத்ன உறுதிபடத்தெரிவித்தார்.[47]<br><br>ராஜபக்சவினருடனான அரசியல் கணக்கினைத் தீர்ப்பதற்கான இச் செயற்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும் இணைந்துள்ளனர் என விசாரணை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கின்ற போது பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச குற்றஞ்சாட்டினார்.[48]<br><br>முறைப்பாட்டில் சிரேஷ்ட அரச சட்டவாதி ஜனக பண்டார பிரதிவாதியாகப் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளார். விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் பிரிவு 16 இனை மேற்கோள் காட்டி சட்டமா அதிபர் எதிர்ப்புத்தெரிவித்ததோடு, சட்டமா அதிபரின் | குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br><br>(முன்னாள் அட்மிரல் ரவீந்திர வீஜேகுணவர்தன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் ஏனையோர் உள்ளடங்கலாக) இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களினை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது தவறாக | Avant Garde தவிசாளரினால் மேற்கொண்டுள்ள முறைப்பாடு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவினை ஆணைக்குழுவின் முன் சமூகமளிக்கும்படி அழைப்பாணை வழங்கப்பட மாட்டாது என மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உறுதியளித்தது.<br><br>நீதிப்பேராணை மனுக்கள் தொடர்பிலான பொருத்தமான கட்டளையொன்றினை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பிக்கும் வரை இவ் உறுதிமொழி வலுவிலிருக்கும்.[51] விசாரணை ஆணைக்குழு தன்னுடைய சட்டரீதியான ஆணைக்கும் புறம்பாக செயற்பட்டிருக்கலாம் என்பது இம் |

[47] ஸ்கந்த குணசேகர, 'நிசங்கவினுடைய முறைப்பாடு ஆணைக்குட்பட்டது என அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு'(*The Morning*, 24 ஆனி 2020), இங்கே பார்வையிடலாம் <https://www.themorning.lk/pcoi-on-political-victimisation-says-nissankas-complaint-within-mandate/> 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[48] ஸ்கந்த குணசேகர, 'அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி ஆணைக்குழு: நல்லாட்சி அமைச்சர்களை அம்பலப்படுத்தும் விஜேதாச' (*The Morning*, 18 ஆனி 2020), இங்கே பார்வையிடலாம் <https://www.themorning.lk/presidential-commission-on-political-victimisation-wijeyadasa-exposes-yahapalana-ministers/> 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[51] சுல்பிக் பர்ஸான், 'மனு மீதாக விசாரணை முடிவடையும் வரை மூன்று சாட்சிகளை அழைக்காதிருக்க PCoI உடன்படுகிறது' (*News First*, 27 ஆடி 2020), இங்கே பார்வையிடலாம் <https://www.newsfirst.lk/2020/07/13/pcoi-has-no-power-to-examine-avant-garde-complaint-says-akd-and-shani-a/>

| | | |
|---|---|---|
| எந்தவொரு தீர்மானத்தினையும் மீளாய்வு செய்வதற்கான அதிகாரத்தினை விசாரணை ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை எனவும், மேலும், தன்னுடைய அதிகாரிகளினை விசாரணை ஆணைக்குழுவின் முன் சமூகமளிக்கும்படி அழைப்பானை விடுப்பது சட்டத்திற்கு முரணானது எனவும் தெரிவித்தார். பொது அதிகாரிகள், அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், ஆயுதப்படை மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் தொடர்பிலான அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவே சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் தன்னுடைய கடிதத்தில் தெரிவித்திருந்தார். முறைப்பாட்டினை முன்வைத்த Avant Garde தவிசாளர் நிசங்க யாப்ப சேனாதிபதிக்கு சட்டத்தகுதி இல்லை எனவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.[49] | சிறையிலடைத்தமை குற்றத்திற்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். | முறைப்பாட்டினைக் கருத்திலெடுப்பதற்கான ஏதுவாக இருக்கலாம். பொது அதிகாரிகள், அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், ஆயுதப்படை மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் தொடர்பிலான அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவே சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் தவிசாளர் (ஓய்வுபெற்ற) மேஜர் நிசங்க யாப்ப சேனாதிபதிக்கு சட்டத்தகுதி இல்லை எனவும் சட்டமா அதிபர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.[52]<br><br>விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

[49] டில்ஷான தாரக, AGஇனுடைய அதிகாரிகள் பங்கேற்கமாட்டார்கள்' (*Daily News*, 23 ஆனி 2020), இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2020/06/23/local/221355/ag%E2%80%99s-officials-will-not-participate > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது.

[52] சுல்பிக் பர்ஸான், 'சட்டமா அதிபரையும் அவரது அதிகாரிகளையும் PCoI புலன்விசாரணை செய்ய முடியாது: சட்டமா அதிபர் திணைக்களம்' (*News First*, 22 ஆனி 2020), இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/06/22/pcoi-cannot-investigate-attorney-general-or-his-officers-ags-department/ > 2 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| 19. ரக்னா ஆரக்ஷ லங்கா நிறுவனம் தொடர்பிலான விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள்: 1807/2020 மற்றும் 431/2020<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பியசிறி பெர்ணாந்து**<br>**விக்டர் சமரவீர** | | |
|---|---|---|
| ரக்னா ஆரக்ஷ லங்கா நிறுவனம் தொடர்பில் இம் முறைப்பாட்டாளர்கள் புலன்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். Avant Garde Maritime Services Ltd., ரக்னா ஆரக்ஷ லங்கா நிறுவனத்தின் வழங்களினை துஷ்பிரயோகம் செய்துள்ளது என்பது புலன்விசாரணைகளினூடு வெளிக்கொணரப்பட்டது. புரட்டாதி மாதம் 2019 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பெர்ணாந்துவிற்கு எதிராக வழங்கப்பட்ட அழைப்பாணையினை மீழுப்பெற்றுக்கொண்டதுடன் | முன்னாள் தவிசாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பியசிறி பெர்ணாந்து மற்றும் விக்டர் சமரவீர உட்பட ரக்னா ஆரக்ஷ லங்கா நிறுவனத்துடன் தொடர்புபட்ட பலரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | தை 2020 இல் கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றம் Avant Garde வழக்கின் குற்றப்பொறுப்புக்களிலிருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பெர்ணாந்து மற்றும் ஏனைய நால்வரை விடுவித்தது. விக்டர் சமரவீர உட்பட ஏனைய எட்டு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்களுக்கு எதிரான வழக்கினை அவர் தொடர்ந்து முன்னெடுப்பாரா என்பதனை கருத்தில் கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.[54] |

[54] ‘Avant Garde வழக்கிலிருந்து ஐவர் விடுவிப்பு’ (*News First*, 17 தை 2020), இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/01/17/5-released-from-the-avant-garde-case/ > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| பிணையாளர்களுடைய கடவுச்சீட்டுக்களையும் விடுவித்தது.[53] | முறைப்பாட்டாளர் விக்டர் சமரவீர காலி நீதவான் நீதிமன்றத்தில் அவாருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |
| **20. முன்னாள் அமைச்சர் ரோஹித போகல்லாகமவினால் பொது நிதி கையாடல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 184/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**ரோஹித போகல்லாகம** | | |
| 2006 இல் மிதமிஞ்சிய செலவீனங்கள் தொடர்பிலான ஊழல் குற்றப்பொறுப்பினடிப்படையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னாள் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரோஹித போகல்லாகமவிற்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு | ரோஹித போகல்லாகமவிற்கு எதிராகப் பதியப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டுமெனவும் வழக்கின் தரவுகள் சுயாதீனமான ஆணைக்குழு ஒன்றினால் கருத்திலெடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. மேலும், முன்னாள் | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சட்ட செயல் நடவடிக்கைகள் மீது இடையூறினை ஏற்படுத்துமென்பதுடன் நீதித்துறை மற்றும் பொதுச்சேவையினது சுயாதீனத்தன்மையினையும் நடுநிலைத் தன்மையினையும் சீர்குலைக்கும். பிறிதொரு |

[53] பரூக் தஜுடீன், 'பாலித பெர்ணாந்துவினை கைது செய்வதற்கு வழங்கப்பட்ட பிடியாணையினை மேல் நீதிமன்றம் மீளப்பெற்றது' (*Daily Mirror*, 5 புரட்டாதி 2019), இங்கே பார்வையிடலாம் < http://www.dailymirror.lk/news/High-Court-recalls-the-warrant-issued-to-arrest-Palitha-Fernando/239-174037 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| குற்றப்பகிர்வுப்பத்திரம் பதிவு செய்தது. இலண்டனில் இடம்பெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு கண்காட்சிக்கு தங்குமிட செலவீனங்களாக 1,170,444.00 ரூபாவினை விடுவிப்பதற்கு சட்ட முரணாக விடுவித்தமை, முதலீட்டுச் சபை தலைவர் கண்காட்சிக்காக 414,000 ரூபாவினை விடுவிக்குமாறு செல்வாக்கு செலுத்தியமை என்பனவற்றை இவருக்கு எதிரான குற்றப்பொறுப்புக்கள் உள்ளடக்கும்.[55] | மன்றாடியார் நாயகம் டில்றுக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவிற்கு எதிராக அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | விசாரணை ஆணைக்குழுவினை நியமிப்பது என்பது, முன்னைய விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பிலான விமர்சனங்களின் காரணமாக சுயாதீனமான செயல்முறை மற்றும் விளைவுகளுக்கு இட்டுச்செல்லாது என்ற காரணத்தினால், தாமதப்படுத்தும் உத்தி என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கருதுகின்றது.<br><br>மாசி 2021இல் முன்னாள் மன்றாடியார் நாயகம் டில்றுக்ஷி டயஸ் விக்கிரமசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தன்னை பதவியில் மீளமர்த்துமாறு பொதுச்சேவை ஆணைக்குழுவினை நெறிப்படுத்தி கட்டளையொன்றினை வழங்கக்கோரி நீதிப்பேராணை மனு ஒன்றினைப் பதிவு செய்தார்.[56] |

[55] லக்மல் சூரியகொட, 2006இல் மிதமிஞ்சிய செலவுக்காக போகல்லாகம குற்றப்பகரப்பட்டார்' (*Daily News*, 6 மாசி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.dailynews.lk/2020/02/26/law-order/212615/bogollagama-indicted-excessive-spending-2006 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[56] லக்மால் சூரியகொட, 'மன்றாடியார் நாயகமாக பதிவியில் மீளமர்த்தப்பட் வேண்டும் என கோரி டில்றுக்ஷி டயஸ் நீதிப்பேராணை மனு ஒன்றினைப் பதிவு செய்தார்' (*Daily News*, 25 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2021/02/25/law-order/242518/dilrukshi-dias-files-writ-petition-calling-reinstatement-solicitor > 6 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| 21. வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 07/2020 மற்றும் 12/2020<br><br>முறைப்பாட்டாளர்கள்:<br><br>மோசஸ் நியோமல் ரங்கஜீவ<br>லமஹேவகே எழில் ராஜன் | | |
|---|---|---|
| இவ் வழக்கு 27 சிறைக்கைதிகள் கொலை செய்யப்பட்ட மற்றும் 43 சிறைக்கைதிகள் காயத்திற்குள்ளாக்கப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறை தொடர்பானது. குறிப்பிட்ட அடையாளங்காணப்பட்ட சிறைக்கைதிகளை இல்லாதொழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கை இதுவென்று பின்னர் புலப்படுத்தப்பட்டது. அரசியல் செல்வாக்கின் காரணமாக இப் படுகொலை தொடர்பிலான முன்னைய புலன்விசாரணைகள் தடைப்படுத்தப்பட்டன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இப் புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. மனித உரிமைகள் ஆணைக்குழுவினுடைய புலன்விசாரணைகள் | அரசியல் பழிவாங்கலின் விளைவாகவே மோசஸ் நியோமல் ரங்கஜீவவிற்கும் லமஹேவகே எழில் ராஜனிற்கும் எதிராக 2012 வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை தொடர்பிலான குற்றப்பொறுப்புக்கள் மேல் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டது என விசாரணை ஆணைக்குழு உறுதிபடத் தெரிவித்தது. இதன் காரணமாக, ஆணைக்குழுவினுடைய அறிக்கையின் கண்டறிதல்களை கருத்திற்கொள்வதோடு தொடரப்பட்டுக்கொண்டிருக்கின்ற வழக்கு தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>அவர்களுக்கு வழங்கவேண்டிய பதவி உயர்வுகளுடன் முறைப்பாட்டாளர்கள் | 2018 இன் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற அரசியலமைப்பு நெருக்கடியின் போது அப்போதைய பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்ட கட்டளையினைத் தொடர்ந்து பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ பதவியில் மீளமர்த்தப்பட்டார். பதவியில் மீளமர்த்தப்பட்டதனைத் தொடர்ந்து வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை வழக்கின் சாட்சிகளை இலக்கு வைத்து அச்சுறுத்தல் விடுக்கின்ற பதிவுகளினை சமூகவலைத்தளங்களில் பதிவிட்டார். பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ பதவியில் மீளமர்த்தப்பட்டமைக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றினை பதிவுசெய்யவுள்ளதாக |

| | | |
|---|---|---|
| சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டது என 2012 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.<br><br>அப்போதைய புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினாலும் அப்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் P.W. கொடிப்பலியினாலும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ் ஆணைக்குழக்களின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. பொலிஸ் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு நிர்வாகத்துறையின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றமையினால் இவ் விடயம் தொடர்பில சுயாதீனமான புலன்விசாரணை முன்னெடுக்கப்பட முடியாது எனக்கூறி, இவ் விசாரணைகளின் சுயாதீனத்தன்மை தொடர்பில் எதிர்க்கட்சி | பதவியில் மீளமர்த்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. சாட்சியங்களினை சோடித்தமைக்காக பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | சிறைக்கைதிகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான செயற்குழு தெரிவித்தது.[58]<br><br>சாட்சிகளின் உறவினர்கள் போலியான குற்றப்பொறுப்புக்களுக்காக சிறையிலிடப்பட்டமை உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட நபர்களும் சாட்சிகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமையினை இவ் வழக்கு குறித்து நிற்கின்றது. விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர்களும் சாட்சிகளும் மேலும் அபாயத்திற்குள்ளாக்கப்படலாம்.<br><br>இது நீதித்துறையினதும் பொதுச்சேவையினதும் சுயாதீனத்தன்மையினையும் இது சீர்குலைப்பதோடு படுகொலை தொடர்பிலான சுயாதினமான விசாரணைக்கும் வழக்குத்தொடரலுக்குமான ஒரேயொரு சந்தர்ப்பத்தினை தடை செய்யும். |

[58] மனெக்ஷா பொறம், ‘IP ரங்கஜீவ பதவியில் மீளமாத்தப்படல்: சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான செயற்குழு மனுத்தாக்கல் செய்யவுள்ளது’ (*Sunday Observer*, 25 கார்த்திகை 2018)

| | | |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.[57] | | |
| 22. **ரஷ்யாவிற்கான முன்னாள் தூதருக்கு சொந்தமான கொள்கலன் தொடர்பிரான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1081/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**உதயங்க வீரதுங்க** | | |
| ரஷ்யாவிற்கான முன்னாள் தூதருக்கு சொந்தமான சரக்குக் கொள்கலன் புலன்விசாரணைக்காக நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் (FCID) கையளிக்கப்பட்டது. இக் கொள்கலன் முன்னாள் தூதராலோ அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபரொருவரினாலோ கோரப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் | ரஷ்யாவிற்கான முன்னாள் தூதரின் குடும்பத்திற்கு சொந்தமான தளபாடங்களினை எடுத்துச் சென்றமை மற்றும் கோட்டை நீதவான் நீதிமன்றத்திடம் போலியான தகவலினை முன்வைத்தமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் சித்திராங்கி வாகீஸ்வர மற்றும் முன்னாள் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் C. A. H. M. விஜேரத்ன ஆகியோரை | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற புலன்விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்கும்.[64] |

[57] இலங்கை பாராளுமன்றம், ஹன்சாட் அறிக்கை 19.12.2012 இங்கே பார்வையிடலாம் <https://www.parliament.lk/uploads/documents/hansard/PUBDOC4234_document.pdf>

[64] ‘இற்றைப்படுத்தல்: முன்னாள் ரஷ்யாவிற்கான தூதுவர் உதயங்க வீரதுங்கவிற்கு சொந்தமான கொள்கலனை பரிசோதிப்பதற்கான நீதிமன்றக்கட்டளை’ (*HiruNews.lk*, 6 ஆடி 2015) இங்கே பார்வையிடலாம் <https://www.hirunews.lk/english/112724/update-court-order-to-inspect-container-belonging-former-russian-ambassador-udayanga-weerathunga> 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| தெரிவித்தார்.[59] முன்னாள் தூதர் அவருடைய இராஜதந்திர கடவுச்சீட்டினை அமைச்சிடம் கையளிக்கும் வரை பொருட்கள் விடுவிக்கப்பட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.[60]<br><br>கொள்கலனினைப் பெற்றுக்கொள்வதற்காக தன்னுடைய துணைவியாருக்கு அதிகாரமளிக்கின்ற ஆவணங்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டன எனக் கோருகின்ற சாட்சியங்களினை முன்னாள் தூதர் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார். மேலும் அவருடைய இராஜதந்திர கடவுச்சீட்டு ரத்துச்செய்யப்பட்டதனைத் தொடர்ந்து புதிய கடவுச்சீட்டொன்றினையும் பெற்றுக்கொண்டார்.<br><br>MiG பேரம்பேசல் தொடர்பில் பணம் தூய்தாக்கல் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் புலன்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் அவரது | விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>கொழும்பு துறைமுகத்திலுள்ள கொள்கலன் விடுவிக்கப்படவேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |

[59] ‘இற்றைப்படுத்தல்: முன்னாள் ரஷ்யாவிற்கான தூதுவர் உதயங்க வீரதுங்கவிற்கு சொந்தமான கொள்கலனை பரிசோதிப்பதற்கான நீதிமன்றக்கட்டளை’ (*HiruNews.lk*, 6 ஆடி 2015) இங்கே பார்வையிடலாம் < https://www.hirunews.lk/english/112724/update-court-order-to-inspect-container-belonging-former-russian-ambassador-udayanga-weerathunga > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[60] லக்னா பரண்ணமான, ‘கடவுச்சீட்டின்றி உதயங்கவின் கொள்கலன் சிக்கியுள்ளது: MFA’ (*Daily Mirror*, 6 ஆடி 2015) இங்கே பார்வையிடலாம் < http://www.dailymirror.lk/Breaking-News/udayanga-s-container-stuck-without-passport-mfa/108-78533 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| இராஜதந்திர கடவுச்சீட்டினையும் பிறிதொரு கடவுச்சீட்டினையும் இடைநிறுத்துமாறு ஆனி 2017இல் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.[61] பின்னர் அவர் துபாயில் கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, இலங்கைக்கு அவர் மீளத்திரும்பிய போது விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சித்திரை 2020இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.[62] ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதராலயத்தின் ஊழியர் திரு. நொயலினுடைய மரணம் தொடர்பான இவருடைய ஈடுபாட்டினையும் அவர் மறுத்தார். இக் கொலை தொடர்பில் ஒரு ரஷ்யக் குடிமகன் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்டிருப்பதுடன் அவர் தற்போது சிறைத்தண்டனையும் அனுபவித்து வருகின்றார் என புதிய ரஷ்ய தூதராலயத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் | | |

[61] ‘உதயங்க வீரதுங்கவின் கடவுச்சீட்டு இடைநிறுத்தப்பட்டது’ (*Sri Lamka Mirror*, 30 ஆனி 2017) இங்கே பார்வையிடலாம் < https://srilankamirror.com/news/3719-udayanga-weeratunga-s-passports-suspended > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[62] உதயங்க வீரதுங்கவிற்கு பிணை வழங்கப்பட்டது’ (*News First*, 3 சித்திரை 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/04/03/udayanga-weerathunga-granted-bail/ > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| சந்திப்பில் இலங்கைக்கான ரஷ்ய தூதர் அலெக்ஸாண்டர் கர்ஷாவா தெரிவித்தார்.[63] | | |
| **23. உக்ரெய்னுடனான MiG பேரம்பேசல் தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1080/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**உதயங்க வீரதுங்க** | | |
| முன்னாள் தூதர் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) புலன்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். உக்ரெய்னிடமிருந்து MiG விமானங்களை கொள்வனவு செய்தமையில் இருந்த நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர் துபாயில் கைது செய்யப்பட்டு, நாடுகடத்தப்பட்டு இலங்கைக்கு மீளத்திரும்பிய போது விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவருடைய கைதுக்காக இன்டர்போல் (INTERPOL) சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் இவரது பெயரிலிருந்த வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டன. | விமானப்படைக்கு MiG விமானங்கள் கொள்வனவு) MiG விமான பேரம்பேசலில் இருந்த நிதி முறைகேடுகள் தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் தலையிடுவதோடு வழக்கினைத் தொடர்ந்து முன்னெடுக்காது விட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. முன்னாள் தூதர் உதயங்க வீரதுங்கவினுடைய வங்கிக் கணக்குகளை முடக்கும்படி வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவினை மீளப்பெற வேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு மேலும் பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

[63] சதுரி திஸ்ஸநாயக்க, 'இலங்கையினுடனான உறவினைப் பலப்படுத்துவதற்கு ரஷ்யா முனைகிறது' (*DailyFT*, 6 மார்கழி 2016) இங்கே பார்வையிடலாம் < https://www.ft.lk/article/584251/Russia-looking-to-strengthen-relations-with-Sri-Lanka > 2 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| சித்திரை 2020இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் இவருக்குப் பிணை வழங்கப்பட்டது.[65] | முன்னாள் தூதருக்கு எதிராக போலியான கோரிக்கைகளினை முன்வைத்ததன் மூலம் இன்டர்போல் (INTERPOL) சிவப்பு அறிவித்தலினை பெற்றுக்கொண்டமையில் அவருடைய வகிபாகத்திற்காக பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் இற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |
| **24. சுன்னாகம் பொலிஸில் தடுப்புக்காவலில் இருந்த சந்தேக நபரின் மரணம் தொடர்பான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 650/2020, 34/2020, 269/2020 மற்றும் 403/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**(ஞானலிங்கம் மயூரனின் சார்பில்) ஞானலிங்கம் தனேஷ்வரி மற்றும் ஏனையோர்.** | | |
| சந்தேக நபர்களை சித்திரவதை செய்த குற்றத்திற்காக சித்திரவதைகள், ஏணைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை வழங்கல் சட்டத்தின் கீழ் 2017 இல் | யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மேன்முறையீடு தொடர்பிலான செயல் நடவடிக்கைகள் | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறை மற்றும் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

[65] உதயங்க வீரதுங்கவிற்கு பிணை வழங்கப்பட்டது' (*News First*, 3 சித்திரை 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/04/03/udayanga-weerathunga-granted-bail/ > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண மேல் நீதி மன்றத்தினால் அளிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பினைத் தொடர்ந்து கொன்ஸ்தபில் ஞானலிங்கம் மயூரன் மற்றும் ஏனைய பல பொலிஸ் அதிகாரிகள் 10 வருடங்களுக்கு சிறையிலடைக்கப்பட்டனர். கொள்ளை சம்பவமொன்றில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தப்பிச்செல்ல எத்தனிக்கும் போது நீரில் மூழ்கியமை சம்பந்தமான புலன்விசாரணை தொடர்பில் மயூரன் கைது செய்யப்பட்டார்.[66]<br><br>கைது செய்யப்பட்டவர் பொலிஸ் அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற தாக்குதலின் காரணமாகவே இறப்பு ஏற்பட்டுள்ளது என மல்லாகம் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த போதிலும் நீரில் மூழ்கியமையின் காரணத்தினாலேயே இறப்பு நிகழ்ந்துள்ளது எனவும் கைது செய்யப்பட்ட நபர் சிறிய காயங்களுக்கே உள்ளாகியிருந்தார் எனவும் மரண விசாரணை வெளிப்படுத்தியுள்ளது. என விசாரணை ஆணைக்குழுவினுடைய தலைவர் | துரிதப்படுத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>வழக்கின் சட்டத்தகுதி அல்லது வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்தல் தொடர்பிலும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இதே சம்பவம் தொடர்பில் நீண்ட தாமதத்திற்குப் பின்னர் இரண்டாவது தடவையாக குற்றப்பொறுப்பு பதிவு செய்யப்பட்டிருப்பதனால் பக்கச்சார்பிற்கான சாத்தியக்கூறு இருப்பதனையும் விசாரணை ஆணைக்குழு குறித்துரைக்கின்றது. | |

[66] பாதிலா தஸிம், 'விஜயகலா சுவிஸ் குமாரிற்கு உதவியளிக்கின்ற ஒளிப்படம் சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் காண்பிக்கப்பட்டது' (*Ceylon Today*, 18 புரட்டாதி 2020), இங்கே பார்வையிடலாம் <https://ceylontoday.lk/news/video-on-vijayakala-assisting-swiss-kumar-played-at-pcoi-hearing> 2 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| உறுதிபடக்கூறினார். இம் முரண்பாடுகளின் தொடர்பில் புலன்விசாரணை செய்வதற்கான கடப்பாட்டினை சட்டமா அதிபர் கொண்டிருந்தார் எனவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.[67]<br><br>பொலிஸ் பரிசோதகர் சிந்தக பண்டார கொன்ஸ்டபில் மயூரன் என்போருக்கு எதிரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன் மற்றும் குமரன் சர்வானந்தாவினுடைய அரசியல் பழிவாங்கல் நோக்கத்தின் விளைவே இக் குற்றச்சாட்டுக்கள் என முறைப்பாட்டாளர் குறிப்பிட்டார். | | |
| **25. திரு. லலித் சேபால ரத்னாயக்க தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1842/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**லலித் சேபால ரத்னாயக்க** | | |
| திரு. சேபால ரத்னாயக்க இலண்டனிலுள்ள இலங்கை தூதராலயத்தில் அமைச்சர் | சேபால ரத்னாயக்க மற்றும் ஏனையோர் மீது அரசியல் பழி தீர்த்துக்கொற்வதற்காக | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், பொலிஸ் புலன்விசாரணைகளை |

[67] பாதிலா தஸிம், ‘விஜயகலா சுவிஸ் குமாரிற்கு உதவியளிக்கின்ற ஒளிப்படம் சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் காண்பிக்கப்பட்டது’ (*Ceylon Today*, 18 புரட்டாதி 2020), இங்கே பார்வையிடலாம் < https://ceylontoday.lk/news/video-on-vijayakala-assisting-swiss-kumar-played-at-pcoi-hearing > 2 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| பதவியினை வகித்தார். இவர் சிரேஷ்ட அரச சட்டவாதியாகவும் சனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளராகவும் பதவி வகித்திருந்தார். காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் வெளிவிவகார அமைச்சினால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம் தன்னுடைய இராஜதந்திர பதவி பதவிக்காலத்திற்கு முன்னரே முடிவுறுத்தப்பட்டது எனக் கோரி சாட்சியங்களை சமாப்பித்தார்.<br><br>சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் புலன்விசாரணை செய்யப்பட்ட பொலன்னறுவையில் இடம்பெற்ற குடும்பத்தகராற்றுடன் உடன் தன்னைத் தொடர்புபடுத்தி தனக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் மேலும் கோரியுள்ளார். திரு. ரத்னாயக்கவிற்கு எதிராக வழங்கப்பட்டிருந்த பிடியாணை மற்றும் பிரயாணத்தடைக்கு மேலதிகமாக இச் சம்பவம் தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கும் மீளப்பெறப்பட்டது. | கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் போலியான தரவுகளினை வழங்கிய குற்றச்சாட்டு தொடர்பில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் S. M. விக்கிரமசிங்க மற்றும் அவருடைய குழுவினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>அரசியலமைப்பின் உறுப்புரை 41 இற்கு அமைவாக சேபால ரத்னாயக்க சிரேஷ்ட அரச சட்டவாதியாக மீளப்பதவியில் அமர்த்தப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | சீர்குலைப்பதோடு அத்தகைய செயல்முறைகள் மீது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும். |

**26. இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 427/2020**

**முறைப்பாட்டாளர்:**

**குமுதுமல் பெல்பிட்டிய**

| | | |
|---|---|---|
| இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபன ஊழியரான திரு. குமுதுமல் பெல்பிட்டியவிற்கு எதிராக நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் நாளேடுகள் அச்சிடப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது. | முன்னாள் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட புலன்விசாரணையின் அடிப்படையில் இப் பதவிநீக்கம் இடம்பெற்றதனால் குறித்த ஆணைக்குழு தொடர்பில் பரிந்துரைகளினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை என தற்போதைய விசாரணை ஆணைக்குழு தீர்மானித்தது. | இம் முறைப்பாடு தொடர்பில் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைகளினை மேற்கொள்ளாததினால் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இது பற்றி கருத்தொன்றினையும் கொண்டிருக்கவில்லை. |

**27. வஸீம் தஜுடீனுடைய மரணம் மற்றும் அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1070/2020**

**முறைப்பாட்டாளர்:**

**கப்ரன் திஸ்ஸ விமலசேன**

| | | |
|---|---|---|
| முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கான | திஸ்ஸ விமலசேனவிற்கு எதிராகக் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கின் செயல் | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தராக கப்ரன் விமலசேன பணிபுரிந்தார். வஸீம் தஜுடீனுடைய படுகொலை மற்றும் அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான புலன்விசாரணைகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கேள்விக்கும் புலன்விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டார். இவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) ஆனி 2017இல் கைது செய்யப்பட்டார்.[68] | நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படக்கூடாது என சட்டமா அதிபர் தலையிட்டு கொழும்பு நீதவான் நிதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. முறைப்பாட்டாளருக்கு எதிராக சாட்சியங்களை சோடிப்பதற்காக போலியான வாக்குமூலங்களைப் பெற எத்தனித்த குற்றச்சாட்டிற்காக பொலிஸ் பரிசோதகர் பிரேமதிலக மற்றும் பிறிதொரு பொலிஸ் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் பொலிஸ் சேவை ஆணைக்குழுவினால எடுக்கப்படவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | வழக்கொன்றின் சட்ட செயல் நடவடிக்கைகளினையும் புலன்விசாரணைகளையும் இடையூறுக்கு உட்படுத்தும். இதன் காரணமாக, இது நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைப்தோடு புலன்விசாரணைகள் மீது தாக்கத்தினையும் ஏற்படுத்தும். |
| **28. Adcore Creative Pvt. Ltd. நிறுவனத்தின் பணிப்பாளர் குமார ஜயகாந்த தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1940/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**குமார ஜயகாந்த** | | |
| சதொச, பொல்கொல்லை செயல்திட்டம் மற்றும் மகாபொல செயல்திட்டம் தொடர்பில் | சதொச, பொல்கொல்லை செயற்திட்டம் மற்றும் மகாபொல செயற்திட்டம் தொடர்பில் | தனியார் நபரான முறைப்பாட்டாளரினை உள்வாங்குவதற்காக விசாரணை |

[68] 'மகிந்த ராஜபக்சவின் சாரதி கப்ரன் திஸ்ஸவினை FCID கைது செய்தது' (*Colombo Telegraph*, 14 ஆனி 2017) இங்கே பார்வையிடலாம் < https://www.colombotelegraph.com/index.php/fcid-arrests-mahinda-rajapaksas-driver-captain-tissa/ > 19 மாசி 2019 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| விளம்பர சேவைகளினை குமார ஜயகாந்த வழங்கியுள்ளார். 2015 இல் நியமிக்கப்பட்ட அரசாங்கம் தன்னுடைய சேவைகளுக்கான கொடுப்பனவினை வழங்கவில்லை என தன்னுடைய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். முறைப்பாட்டாளருக்கும் அவருடைய துணைவியாருக்கும் எதிராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசக் கட்டுமான வரியினைத் (NBT) செலுத்த தவறியமைக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.<br><br>வாக்குமூலம் வழங்குவதற்காக தான் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கும் (FCID) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கும் அழைக்கப்பட்டதாகவும், அங்கு அவர் போலியான வாக்குமூலங்களை வழங்கும்படி கேட்கப்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார். | வழங்கப்பட்ட விளம்பர சேவைக்கான நட்டஈட்டினை Adcore Creative Pvt. Ltd. நிறுவனத்தின் பணிப்பாளர் குமார ஜயகாந்தவிற்கு வழங்குவதற்கான நடவடிக்கை திறைசேரியினால் எடுக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | ஆணைக்குழு தன்னுடைய ஆணையினை தளர்வான முறையில் பொருள்கோடல் செய்துள்ளது. |

| | | |
|---|---|---|
| **29. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிலிருந்து பிரதம பரிசோதகர் திஸ்ஸ பிலபிட்டியவினை இடமாற்றம் செய்தமைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 77/2020** | | |
| **முறைப்பாட்டாளர்:** | | |
| **பிரதம பரிசோதகர் திஸ்ஸ பிலபிட்டிய** | | |
| Avant Garde வழக்கு புலன்விசாரணையின் போது சனாதிபதி கோட்டாபயவிற்கு எதிரான சாட்சியங்களினை சோடிப்பதில் தான் இணங்கி செயற்படாமையே தான் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிலிருந்து இடமாற்றப்பட்டமைக்கான காரணம் என பிரதம பரிசோதகர் குற்றஞ்சாட்டுகிறார். | அவருடைய சேவைக்காலத்தினைக் கருத்திற்கொண்டு முறைப்பாட்டாளரான பிரதம பரிசோதகருக்கு பதவியுயர்வினை வழங்குமாறு பொலிஸ் சேவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைப்பதனைக் கருத்திற்கொள்ளவேண்டுமென பொலிஸ்மா அதிபருக்கு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>(ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்) திருமதி டில்றுக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவிற்கு எதிராக சனாதிபதி கோட்டாபயவிற்கு எதிரான ஊழல் குற்றப்பொறுப்புக்களை சுமத்துவதற்காக சாட்சியங்களினை சோடிப்பதற்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும்.<br><br>தன்னை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு நெறிப்படுத்தி பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு கட்டளை ஒன்றினைப் பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்றினை மன்றாடியார் நாயகம் டில்றுக்ஷி டயஸ் விக்கிரமசிங்க 2021 மாசி மாதம் பதிவு செய்தார்.[69] |

[69] லக்மால் சூரியகொட, 'மன்றாடியார் நாயகமாக பதிவியில் மீளமர்த்தப்பட் வேண்டும் என கோரி டில்றுக்ஷி டயஸ் நீதிப்பேராணை மனு ஒன்றினைப் பதிவு செய்தார்' (*Daily News*, 25 மாசி 2021) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2021/02/25/law-order/242518/dilrukshi-dias-files-writ-petition-calling-reinstatement-solicitor > 6 சித்திரை அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| | உடந்தையாக இருந்த குற்றச்சாட்டிற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |
| **30. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முன்னாள் ஊழியர் தொடர்பிலான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 18/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**மாலனி குமாரி** | | |
| முறைப்பாட்டாளர் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஊழியராக இருந்து பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 41இற்கு அமைவாக சனாதிபதி ஆளணியில் (2013 ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து 2015 வரை) இணைந்துகொண்டார். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து சொத்துக்கள்/நிதிகளினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்தமை தொடர்பில் அவருக்கு எதிரான குற்றப்பொறுப்புக்கள் அமைந்துள்ளன. | முறைப்பாட்டாளருக்கு எதிரான குற்றப்பகர்வுப் பத்திரம் தொடர்பிலான செயல் நடவடிக்கைகளைத் தொடர்வதா என்பது பற்றி சட்டமா அதிபர் கருத்திலெடுக்க வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மாலனி குமாரியினை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் நியமிப்பதோடு பதவியுயர்வும் வழங்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு மேலும் பரிந்துரைக்கின்றது.<br><br>முறைப்பாட்டாளர் தொடர்பிலான புலன்விசாரணையின் போது முறையற்ற செல்வாக்கினை செலுத்தியமைக்காக பிரதிப் | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினதும் பொதுச்சேவையினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

| | | |
|---|---|---|
| | பொலிஸ்மா அதிபர் பண்டாரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |
| **31. தேசிய லொத்தர் சபையின் தவிசாளர் தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1941/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**சந்திம புஷ்பகுமார அதுலவகே** | | |
| தேசிய லொத்தர் சபையின் தவிசாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் (வியாபார மேம்பாட்டுக்கான) விளம்பரப் பதாகைகளை ஒரு சனாதிபதி வேட்பாளருக்கு சாதகமான விதத்தில் அமைக்க அவர் எடுத்த தீர்மானம் தொடர்பிலான நம்பிக்கை மீறல் மற்றும் நிதிகளின் குற்றவியல் துஷ்பிரயோகம் என்பவற்றுடன் தொடர்புபட்டவையாகும். இக் குற்றச்சாட்டுக்கள் அரசியல் பழிவாங்கல் நோக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டவை என விசாரணை ஆணைக்குழு உறுதிபடத் தெரிவித்தது. | தேசிய லொத்தர் சபையின் தவிசாளர் சந்திம புஷ்பகுமார அதுலவகேவிற்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கின் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதனை தவிர்ப்பதனை கருத்திற்கொள்வதற்காக சட்டமா அதிபர் தலையீடு செய்யவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறையினது சுயாதீனத்தன்மையினை சீர்குலைப்பதோடு சட்டமா அதிபரின் கடமைகளின் மீது முறையற்ற செல்வாக்கினை செலுத்துவதாகவும் அமையும். |

| **32. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவரினை பதவியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 317/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**சமிந்த சமரக்கோன்** | | |
|---|---|---|
| 2015ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தான் தன்னுடைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2/3 தர (சில்லறை) விற்கனை முகாமையாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதாக முறைப்பாட்டாளர் குறிப்பிட்டார். இவர் ஊழல், சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிகளைத் துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் சூப்பர் மோட்டார் குறுக்குப் (Super Motor Cross) போட்டிக்கு விளம்பரங்களினை வழங்கியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.[70] | பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2/3 தர (சில்லறை) விற்கனை முகாமையாளர் பதவியில் முறைப்பாட்டாளரினை மீளப்பதவியில் அமர்த்துமாறு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதிலிருந்து மீண்டும் பதவியிலமர்த்தப்படும் வரையான காலப்பகுதியில் அவருக்கு உரித்தான பதவி உயர்வுகளுக்கும் அவர் தகைமையுள்ளவராக அமைய வேண்டும். | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், பொதுச் சேவையின் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். |

[70] 'CPC தன்னுடைய விற்பனை முகாமையாளரை இடைநிறுத்தியது' (*Sri Lanka Mirror*, 11 தை 2017) இங்கே பார்வையிடலாம் <https://srilankamirror.com/news/1369-cpc-suspends-its-sales-manager> 19 மாசி 2019 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| பல்வேறு முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்னாள் அமைச்சர் ரணவகவிற்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அதிகாரிகளுக்கு எதிராகவும் இவர் மேற்கொண்டிருந்தார். | | |
| **33. தன்னுடைய இடமாற்றல் மற்றும் ஓய்வு தொடர்பில் முன்னாள் பாடசாலை அதிபர் உபாலி குணசேகரவினால் வைக்கப்பட்ட முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 856/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**ஊபாலி குணசேகர** | | |
| தனக்கு எதிரான அரசியல் பழிவாங்கலின் காரணமாகவே தான் றோயல் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதாக ஓய்வுபெற்ற அதிபர் உபாலி குணசேகர குற்றஞ்சாட்டுகிறார். இவர் முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தினை பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிட்டுள்ளார். | அவருடைய 55 வயதிலான முன்கூட்டிய ஓய்வு அரசியல் பழிவாங்கலின் காரணமாக ஏற்பட்டதன் காரணத்தினால், ஒப்பந்த அடிப்படையில் குறைந்த பட்சம் இரண்டு வருட காலப்பகுதிக்கு றோயல் கல்லூரியின் அதிபர் பதவியில் அவர் மீளமர்த்தப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், பொதுச் சேவையின் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். |

| 34. ஸ்ரீ.ல.சு.க. (SLFP) அம்பாந்தோட்டை செயற்குழு கூட்டத்தினுள் துப்பாக்கி ஒன்றினை கொண்டுசென்ற குற்றச்சாட்டுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 893/2020<br>முறைப்பாட்டாளர்:<br>M.S.P. மல்லவகே | | |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் பாதுகாப்பு அணியில் அங்கம் வகித்த கோப்ரல் ருவன் சேனகவினை ஸ்ரீ.ல.சு.க. (SLFP) அம்பாந்தோட்டை செயற்குழு கூட்டம் இடம்பெற்ற வளாகத்தினுள் துப்பாக்கியுடன் உள்நுழைய அனுமதியளித்தமையே முறைப்பாட்டாளருக்கு எதிரான குற்றச்சாட்டாகும். இக் கூட்டத்தில் முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிரிசேன பங்குபற்றியிருந்தார். | முறைப்பாட்டாளருக்கு எதிராக அங்குணகொலபெலஸ்ச நீதவான் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த செயல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு விட்டன என மேலதிக மன்றாடியார் நாயகம் ஆணைக்குழுவிற்கு அறிவித்தார். வழக்கினைத் தொடாந்து முன்னெடுப்பது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யும்படி சட்டமா அதிபரினைக் கோருகின்ற விசாரணை ஆணைக்குழவின் பரிந்துரை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது என விசாரணை ஆணைக்குழு குறித்துரைக்கின்றது.<br><br>கோப்ரல் துப்பாக்கி ஒன்றினை வைத்திருக்காத காரணத்தினால் குற்றச்சாட்டானது அடிப்படையற்றதும் அரசியல் பழிவாங்கலின் விளைவே என்றும் விசாரணை ஆணைக்குழு உறுதிபடத் | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | தெரிவித்தது. சாட்சியங்களினைச் சோடித்த குற்றத்திற்காக இவ் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த புலன்விசாரணை அதிகாரிகள் மீது குற்றப்பொறுப்புச் சுமத்தப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |
| **35. அரசாங்க தகவல் திணைக்கள அதிகாரியின் இடமாற்றலுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 22/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**கபில ஆரியவன்ச** | | |
| திவிநெகும செயற்திட்டம் தொடர்பான ஆவணங்களை அச்சிடுவதில் தான் ஈடுபட்டிருந்த காரணத்தினாலும், நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) முன்னெடுக்கப்பட்ட புலன்விசாரணையொன்றின் போது திரு. பசில் ராஜபக்சவிற்கு எதிராக சாட்சியங்களினை சோடிப்பதற்கு மறுத்ததன் காரணமாகவும் அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்தான தன்னுடைய இடமாற்றம் அரசியலினால் ஊக்குவிக்கப்பட்டதென கபில ஆரியவன்ச குற்றஞ்சாட்டுகிறார். | கபில ஆரியவன்ச அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக பணிப்பாளர் பதவியில் மீளமர்த்தப்பட வேண்டுமெனவும் அவருக்கு வழங்கப்பட வேண்டிய உரித்துரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், பொதுச் சேவையின் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். பொது அதிகாரிகளினை இடமாற்றம் செய்வது தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறைகளை கடந்து செல்வதாக விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரை அமையலாம். |

**36. வஸீம் தஜுடீனுடைய இறப்பு தொடர்பிலான புலன்விசாரணையுடன் தொடர்புபட்ட பொறுப்பதிகாரி சுமித் பேரேராவினுடைய பதவி விலக்கலிற்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 615/2020**

**முறைப்பாட்டாளர்:**

**சுமித் பெரேரா**

| | | |
|---|---|---|
| வஸீம் தஜுடீனுடைய கொலை தொடர்பிலான புலன்விசாரணையின் போது சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் பொறுப்பதிகாரி பெரேரா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் சகல குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் நாளடைவில் விடுவிக்கப்பட்டார்.[71]<br><br>புலன்விசாரணையில் இடையீடு செய்தார்கள் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவினை தொடர்புறுத்தும் வகையில் போலியான வாக்குமூலங்களை உருவாக்கும்படி பல்வேறு அதிகாரிகளினால், குற்றப்புலனாய்வு | முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்சவினுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு எதிராக முன்னைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் பழிவாங்கலின் விளைவே வஸீம் தஜுடீனுடைய கொலை தொடர்பிலான புலன்விசாரணை என விசாரணை ஆணைக்குழு உறுதிபடக்கூறுகின்றது. மது அருந்திய பின்னர் வாகனம் செலுத்திமையினால் ஏற்பட்ட வீதிவிபத்தின் காரணமாகவே வஸீம் தஜுடீனுடைய மரணம் சம்பவித்தது.<br><br>கொலைக்குற்றச்சாட்டு புலன்விசாரணையுடன் தொடர்புபட்டிருந்த காரணத்தினால் கைது | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற வழக்கொன்றின் புலன்விசாரணைகளோடும் சட்டசெயல் நடவடிக்கைகளினை அடையூறு செய்யும். இதன் காரணமாக இது நீதித்துறையினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். காட்டுமிராண்டித் தனமான தாக்குதலின் போது ஏற்பட்ட காயங்களின் காரணமாகவே தஜுடீன் உயிரிழந்தார் என்பதனை வெளிப்படுத்திய இரண்டாவது மரணப் பரிசோதனை அறிக்கையின் கண்டறிதல்களும் விசாரணை ஆணைக்குழுவின் கணடறிதல்களும் |

[71] ஔரகி சிங் மற்றும் ஆன்யா விபுலசேன, ‘தஜுடீன் சரித்திரம்: கொலையினை மூடிமறைத்த வழக்கு ஐப்பசியில் ஆரம்பிக்கவுள்ளது’ இங்கே பார்வையிடலாம் < http://www.sundayobserver.lk/2019/07/21/thajudeen-saga-murder-cover-trial-set-begin-october >

| | | |
|---|---|---|
| திணைக்களத்தின் புலன்விசாரணையின் போது தான் கேட்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டுகிறார். | செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு (மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட) பொறுப்பதிகாரி சுமித் பெரேராவினை பதவியில் மீளமர்த்துமாறு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. (முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் 'குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் நகஹமுல்ல) ஆகிய பிரதிவாதிகளுக்கு எதிராக சாட்சியங்களினைச் சோடித்த குற்றச்சாட்டிற்காக அவசியமான சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | ஒன்றுக்கொன்று முரணானவை.[72] பழிவாங்கல் தொடர்பான அச்சத்தின் காரணமாக அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து புலன்விசாரணை அதிகாரிகளினைத் தடுக்கின்ற அச்சமூட்டுகின்ற விளைவினை இப் பரிந்துரைகள் கொண்டிருக்கலாம். |
| **37. 2012 வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்துடன் தொடர்புடைய சிறைச்சாலை அதிகாரி இந்திக சம்பத் பதவி நீக்கப்பட்டதற்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 43/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**இந்திக சம்பத்** | | |
| 27 சிறைக் கைதிகள் கொலை செய்யப்படுவதற்கும் 43 சிறைக்கைதிகள் காயமடைவதற்கும் 2012 வெலிக்கடை | சிறைச்சாலை அதிகாரி இந்திக சம்பத் மீளப்பதவியில் அமர்த்தப்படுவதற்கு விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | போலியான குற்றப்பொறுப்புக்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நபர்களின் உறவினர்கள் சிறையிலடைக்கப்பட்டமை |

[72] வெரிடே ஆய்வு, 'தஜுடீன் சரித்திரம்: கொலையினை முடிமறைத்த வழக்கு ஐப்பசியில் ஆரம்பிக்கவுள்ளது' இங்கே பார்வையிடலாம் < https://www.veriteresearch.org/2019/07/22/wasim-thajudeen-murder/ >

| | | |
|---|---|---|
| சிறைச்சாலைக் கலவரம் இட்டுச்சென்றது. இது குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட சிறைக்கைதிகளை இல்லாதொழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஒருங்கமைக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்ற விபரம் பின்னர் வெளிச்சத்திற்கு வந்தது. அரசியல் செல்வாக்கின் காரணமாக இப் படுகொலை தொடர்பிலான முன்னைய விசாரணைகள் தடைப்படுத்தப்பட்டன.<br><br>மோசஸ் ரங்கஜீவ, லமஹேவகே எழில் ராஜன் மற்றும் சிறைச்சாலை அதிகாரி இந்திக சம்பத் என்போருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பகர்வுப் பதிதிரத்தினைப் பதிவு செய்திருந்தார். நீதிமன்ற செயல் நடவடிக்கைகளின் போது தலைமறைவாகியிருந்த சிறைச்சாலை அதிகாரி இந்திக சம்பத்[73] பின்னர், சாட்சியங்கள் போதாததின் காரணத்தினால் | | உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட நபர்களும், சாட்சிகளும் பாரதூரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமையினை இவ் வழக்கு குறித்து நிற்கின்றது. விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் பாதிக்கப்பட்ட நபர்களும், சாட்சிகளும் மேலும் அபாயத்திற்கு உள்ளாக்குகின்ற சந்தர்ப்பம் காணப்படுகின்றது.<br><br>இது சட்டவாட்சியினை சீர்குலைப்பதோடு படுகொலை தொடர்பான சுயாதீனமான புலன்விசாரணையொன்றிற்கும் வழக்குத்தொடரலுக்குமுள்ள ஒரேயொரு சந்தர்ப்பத்தினையும் தடைப்படுத்தும். |

[73] பருக் தஜுடீன், வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை குற்றப்பகர்வுப் பத்திரம் வழங்கப்பட்டதோடு சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்கட்டனர்' (*DailyFT*, 19 ஆடி 2019) இங்கே பார்வையிடலாம் < https://www.ft.lk/News/Welikada-Prison-Massacre-Indictment-served-and-accused-released-on-bail/56-682259 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.[74] | | |
| **38. கடத்தப்பட்ட தங்கம் கடற்படையிடம் கையளிக்கப்பட்டமை தொடர்பான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 325/2020 மற்றும் 326/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**ஜகத் பிரேமலால் விஜேவீர**<br><br>**தாரக செனவிரத்ன** | | |
| (முன்னாள் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஜகத் விஜேவீர முன்னாள் சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் தாரக செனவிரத்ன ஆகிய) முறைப்பாட்டாளர்கள் போர் நினைவுத் தூபியின் (Sandahiru Maha Seya) பகுதியொன்றாக தங்கத்திலான தூபியொன்றினை நிர்மாணிப்பதற்காக கடற்படையிடம் 8 கிலோ எடையுள்ள கடத்தப்பட்ட தங்கத்தினை சட்டத்திற்கு முரணான விதத்தில் வழங்கியமை | கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் முறைப்பாட்டாளர்கள் ஜகத் பிரேமலால் விஜேவீர மற்றும் தாரக செனவிரத்ன ஆகியோர் விடுவிக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மேலும், இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், நீதித்துறையினதும், புலன்விசாரணைகளினதும் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும்.<br><br>அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று 29 தை 2021 அன்று |

[74] டில்ஷான் தாரக, 'வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தின் மூன்றாவது சந்தேக நபரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயம் விடுவித்தது' (*Daily News*, 16 ஆடி 2020) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2020/07/16/law-order/223448/colombo-hc-trial-bar-acquits-third-accused-welikada-prison-riots > 19 மாசி அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| தொடர்பான குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.[75] | தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. தவறாக சிறையிலடைத்தமைக்காக இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். ஊழலுக்கு எதிரான செயற்குழுவுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், அவர்களுக்கு எதிராக சமூக இயலாமை பரிந்துரைக்கப்படலாம் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | நியமிக்கப்பட்டது.[76] குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்டவர்கள் மீது சமூக இயலாமையினை சுமத்துவதற்கான அதிகாரத்தினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது.[77] |

[75] 'சுங்கத்தின் முன்னாள் DG, ADG தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்' (*Daily News*, 9 ஐப்பசி 2019) இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2019/10/09/local/199338/former-customs-dg-adg-further-remanded > 19 மாசி 2019 அன்று அணுகப்பட்டது

[76] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_T.pdf >

[77] ஷாந்தனி கிரிந்தே, 'புதிதாக நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் சமூக இயலாமைக்கு முகங்கொடுக்க வேண்டிய முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள்' (*DailyFT*, 1 மாசி 2021), இங்கே பார்வையிடலாம் < https://www.ft.lk/front-page/Members-of-previous-Govt-may-face-civil-disability-if-found-guilty-by-newly-appointed-Special-Presidential-CoI/44-712430 > 1 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| 39. லிற்றோ (Litro) வாயு வழக்கில் பொது நிதியினைக் கையாடல் செய்த குற்றச்சாட்டிற்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 414/2020<br><br>முறைப்பாட்டாளர்:<br><br>பியதாச குடபாலகே | | |
|---|---|---|
| ஊழலுக்கு எதிரான செயற்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் பியதாச குடபாலகே பொது நிதியினைக் கையாடல் செய்தமைக்காகவும் குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காகவும் புலன்விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்.<br><br>(காமினி சேனரத் மற்றும் நீல் ஹப்புஹின்ன ஆகியோருடன் இணைந்து) முறைப்பாட்டாளர் லிற்றோ வாயுவிடமிருந்து 500 மில்லியன் ரூபாவினை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு, பின்னர் அக் குற்றப்பொறுப்புக்களிலிருந்து கொழும்பு | பிரதிவாதிகளினால் தாபிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான செயற்குழு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், அரசியல் பழிவாங்கல் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் என அடையாளங்காணப்பட்டவர்கள் மீது 7 வருடகால சமூக இயலாமையினை சுமத்துவதற்கும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் பியதாச குடபாலகே உள்நாட்டு அல்லது | அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று[79] 29 தை 2021 அன்று நியமிக்கப்பட்டது.<br><br>குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்டவர்கள் மீது சமூக இயலாமையினை சுமத்துவதற்கான |

[79] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் <http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_T.pdf>

| | | |
|---|---|---|
| நிரந்தர மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.[78] | சர்வதேச முகாமைத்துவ அறிவுரைஞர் பதவியில் மீளமர்த்தப்படவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதேபோன்று, திரு. லசந்த பண்டாரவினுடைய அனுபவத்திற்குப் பொருத்தமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பதவியொன்றில் நியமிக்கப்படவேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>மேலதிகமாக, இம் முறைப்பாட்டில் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் (ஊழலுக்கு எதிரான செயற்குழுவின் உறுப்பினர்கள்) மீது சாட்சியங்களினை சோடித்த குற்றத்திற்காக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | அதிகாரத்தினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது.[80] |

[78] 'லிட்ரோ வாயு வழக்கிலிருந்து காமினி சேனரத் விடுவிக்கப்பட்டார்' (*Economy Next*, 8 ஆவணி 2019) இங்கே பார்வையிடலாம் < https://economynext.com/gamini-senarath-acquitted-in-litro-gas-case-43987/ > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[80] ஷாந்தனி கிரிந்தே, 'புதிதாக நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் சமூக இயலாமைக்கு முகங்கொடுக்க வேண்டிய முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள்' (*DailyFT*, 1 மாசி 2021), இங்கே பார்வையிடலாம் < https://www.ft.lk/front-page/Members-of-previous-Govt-may-face-civil-disability-if-found-guilty-by-newly-appointed-Special-Presidential-CoI/44-712430 > 1 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| **40. லிற்றோ வாயு வழக்கில் பொது நிதியினை கையாடல் செய்வதற்கு உடந்தை அளித்தமை குற்றச்சாட்டிற்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 416/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**லசந்த பண்டார** | | |
| லிற்றோ வாயு நிதியிலிருந்து 500 மில்லியன் ரூபாவினை கையாடல் செய்ய உடந்மை அளித்தமை குற்றச்சாட்டிற்காக முறைப்பாட்டாளர் கைது செய்யப்பட்டு புலன்விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். ஆவணி 2019 இல் கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தினால் அவர் குற்றப்பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்.[81] | புலன்விசாரணையில் சம்பந்தப்பட்டிருந்த பிரதிவாதி அரசியல்வாதிகள் மற்றும் சட்டத்தரணிகள் (ஊழலுக்கு எதிரான செயற்குழுவின் உறுப்பினர்கள், J.C. வெலியாமுன, ஜயம்பதி விக்கிரமரத்ன மற்றும் ஏனையோர்) மீது போலியான சாட்சியங்களைச் சோடித்த குற்றங்களுக்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்படவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>பிரதிவாதிகளினால் தாபிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான செயற்குழு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், அரசியல் | அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று[82] 29 தை 2021 அன்று நியமிக்கப்பட்டது.<br><br>குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்டவர்கள் மீது சமூக இயலாமையினை சுமத்துவதற்கான |

[81] 'காமினி சேனரத் மற்றும் ஏனைய இருவர் லிட்ரோ வாயு வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்' (*Ada Derana*, 8 ஆவணி 2019) இங்கே பார்வையிடலாம் < http://adaderana.lk/news/56947/gamini-senarath-and-2-others-acquitted-over-litro-gas-case > 1 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[82] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_T.pdf >

| | | |
|---|---|---|
| | பழிவாங்கல் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் என அடையாளங்காணப்பட்டவர்கள் மீது 7 வருட சமூக இயலாமையினை சுமத்துவதற்கும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>முறைப்பாட்டாளரின் பணிநீக்கம் அரசியல் நோக்கங்களினைக் கொண்டது என்ற காரணத்தினால் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் அவரது அனுபவத்திற்குப் பொருத்தமான பதவியொன்றில் அவர் நியமிக்கப்படவேண்டுமென்று விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | அதிகாரத்தினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது.[83] |

[83] ஷாந்தனி கிரிந்தே, 'புதிதாக நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் சமூக இயலாமைக்கு முகங்கொடுக்க வேண்டிய முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள்' (*DailyFT*, 1 மாசி 2021), இங்கே பார்வையிடலாம் < https://www.ft.lk/front-page/Members-of-previous-Govt-may-face-civil-disability-if-found-guilty-by-newly-appointed-Special-Presidential-CoI/44-712430 > 1 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| 41. லசந்த விக்கிரமதுங்கவினுடைய கொலை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 415/2020<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**பிரசன்ன நாணயக்கார** | | |
|---|---|---|
| லசந்த விக்கிரமசிங்கவினுடைய கொலை தொடர்பிலான புலன்விசாரணையுடன் தொடர்புபட்ட சாட்சியங்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டிற்கு அமைவாக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணை வழங்கப்பட்டார்.[84] | கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகப்பதிவுசெய்யக்கட்டுள்ள அனைத்து குற்றப்பொறுப்புக்களிலிருந்தும் முறைப்பாட்டாளர் பிரசன்ன நாணயக்கார விடுவிக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>அவர்களால் புரியப்பட்ட குற்றங்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் தண்டனையினைத் தீர்மானிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின், மிகவும் காலந்தாழ்த்தப்பட்டுள்ள புலன்விசாரணைகளையும் சட்ட செயல் நடவடிக்கைகளினையும் மேலும் பின்னடையச் செய்வதுடன் பொலிஸ் மற்றும் சட்ட அதிகாரிகளினை அரசியல் கூருணர்வு மிக்கன எனக்கருதப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதனையும் தடுக்கும்.<br><br>ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவினுடைய குடும்பம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயற்குழுவிடம் முறைப்பாடு ஒன்றினை 2021 தை மாதம் பதிவு செய்தது.[85] ஊடகவியலாளரின் கொலை |

[84] Asian Mirror, லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கு: முன்னாள் DIG பிரசன்ன நாணயக்கார மற்றும் SI சுகததாச பிணையில் விடுவிப்பு' இங்கே பார்வையிடலாம் < https://asianmirror.com/news/item/27825-lasantha-wickramatunga-murder-case-former-dig-prasanna-nanayakkara-and-si-sugathadasa-released-on-bail >

[85] The Globe and Mail, ஐ.நா. மனித உரிமைகள் செயற்குழுவிடம் முறைப்பாட்டினைப் பதிவு செய்த கொலை செய்யப்பட்ட இலங்கை ஊடகவியலாளரின் மகள்' இங்கே பார்வையிடலாம் < https://www.theglobeandmail.com/world/article-daughter-of-slain-sri-lankan-journalist-files-complaint-with-un-rights/ >

| | | |
|---|---|---|
| | தண்டனைச்சட்டக்கோவையின் கீழும் இலஞ்சச் சட்டத்தின் கீழும் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. | தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணையினை மேற்கொள்வதற்கு இலங்கை சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் தவறியுள்ளன அல்லது அத்தகைய முயற்சிகளுக்கு இடையூறு விளைவித்துள்ளன என முறைப்பாடு குறித்துரைக்கின்றது.[86] |
| **42. Hyatt Regency வழக்கில் தொடாடபுடைய நிதிகளை மோசடியான முறையில் பரிமாற்றம் செய்த குற்றச்சாட்டுக்கு எதிராக முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 352/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**நீல் ஹப்புஹின்ன** | | |
| Hyatt Regency ஆதன விற்பனையின் நிதிகளினை Sinolanka தனியார் நிறுவனத்திற்கு மோசடியான முறையில் பரிமாற்றம் செய்தார் எனவும், லிற்றோ வாயு நிறுவனத்திடமிருந்து நிதிகளைக் கையாடல் செய்தார் எனவும் முறைப்பாட்டாளர் நீல் ஹப்புஹின்ன குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். | சாட்சியங்களினை சோடித்த குற்றத்திற்காக தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பிரதிவாதிகள் மீது குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைப்பதோடு, பாரியளவிலான ஊழல் நடவடிக்கைகளுக்கு தண்டனையிலிருந்தான விலக்களிப்பினையும் குறித்து நிற்கும். |

[86] ‘கொலை செய்யப்பட்ட இலங்கை ஊடகவியலாளர் லசந்த விக்கரமதுங்கவின் மகள் ஐ.நா. முறைப்பாட்டினைப் பதிவு செய்தார்’ (*The Hindu*, 8 தை 2021) இங்கே பார்வையிடலாம் <https://www.thehindu.com/news/international/slain-sri-lankan-journalist-lasantha-wickrematunges-daughter-files-un-complaint/article33530770.ece> 6 சித்திரை 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| சட்டமுரணான ஒப்பந்த முடிவுறுத்தலுக்காக (மத்தியஸ்தத்தினை நாடிய) Interna Contract Spa விற்கு 7,432,062.72 யூரோக்களை செலுத்துமாறு கட்டளையிட்டு உத்தியோகபூர்வமான தீர்ப்பொன்று (award) சிங்கப்பூரிலுள்ள மத்தியஸ்த சபையினால் Sinolanka நிறுவனத்திற்கு எதிராக 6 ஐப்பசி 2017 அன்று வழங்கப்பட்டது.[87] | பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். | |

43. **ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடுகள் – முறைப்பாட்டு இலக்கங்கள் 24/2020, 200/2020, 198/2020, 196/2020, 194/2020, 197/2020, 199/2020, 195/2020, 104/2020, 239/2020, 31/2020, 231/2020, 1052/2020 மற்றும் 347/2020**

**முறைப்பாட்டாளர்கள்:**

**கேணல் ஷம்மி அர்ஜுன குமாரரத்ன**
**நடன் என அழைக்கப்படும் பிரியந்த குமார ராஜபக்ச**
**சுரேஷ் என அழைக்கப்படும் வினி பிரியந்த டிலஞ்சன் உபசேன**
**ரஞ்சி என அழைக்கப்படும் ரவீந்திர ரூபசேன**
**சமிந்த குமார அபேரத்ன**
**கனிஷ்க குணரத்ன**

[87] Daily Mirror, 'Grand Hyatt ஹோட்டல் செயல்திட்டம்: ஒப்பந்த முடிவுறுத்தலினால் பாரிய இழப்பினால் தவிக்கும் அரசாங்கம்' இங்கே பார்வையிடலாம் < http://www.dailymirror.lk/expose/Grant-Hyatt-Hotel-Project-Govt-suffers-mammoth-loss-due-to-termination-of-contract/333-150691 >

| **ஜயாசாமி பாலசுப்பிரமணியம்**<br>**தரங்க பிரசாத் கமகே**<br>**TER பீரிஸ்**<br>**கேணல் பிரபோத சிறிவர்தன மற்றும் ஏனையோர்** | | |
|---|---|---|
| ஊடகவியலாளரினை கடத்தியமை மற்றும் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியமைக்காக[88] பதவியில் இருந்து நீக்கப்பட்ட பலர் முறைப்பாட்டாளர்களாக அமைந்துள்ளனர். சாட்சியங்களினை தடுத்து நிறுத்துவதற்கான எத்தனிப்புக்கள் மற்றும் சாட்சிகளின் அச்சுறுத்தல் காரணமாக புலன்விசாரணை தாமதமடைந்துள்ளது.[89]<br><br>முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்சவினுடைய அறிவுறுத்தலுக்கு அமைவாகவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் தனக்கு அழுத்தம் கொடுத்தார்கள் என விசாரணை | (முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் குற்றப்புரனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் ஏனையோர் உட்பட்ட) முறைப்பாட்டின் பல பிரதிவாதிகள் மீது சாட்சியங்களை சோடித்தல், போலி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் தவறாக சிறையிலடைத்தல் குற்றங்களுக்காக குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதே போன்று பல முறைப்பாட்டாளர்களுக்கு | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் மிகவும் காலந்தாழ்த்தப்பட்ட புலன்விசாரணைகள் மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகள் மீது பின்னடைவினை ஏற்படுத்துவதுடன் நீதித்துறையினதும் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மை சீர்குலைக்கப்படும். சாட்சிகளை தடுத்து நிறுத்துவதற்கான எத்தனிப்புகளையும் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் சாட்சிகள் அச்சுறுத்தப்படுவதனையும் இப் புலன்விசாரணை குறித்து நிற்கின்றது. |

[88] Daily Mirror, 'பிரகீத் எக்னெலிகொட வழக்கு: ஒன்பது இராணுவ அதிகாரிகள் குற்றப்பகர்வு செய்யப்பட்டனர்' இங்கே பார்வையிடலாம் < http://www.dailymirror.lk/breaking_news/Prageeth-Ekneligoda-case-Nine-army-officials-indicted/108-178597 >

[89] Sunday Observer, 'பிரகீத்: அரசியல் நோக்கம் கொண்டதொரு கொலை' இங்கே பார்வையிடலாம் < http://www.sundayobserver.lk/2019/01/20/news-features/prageeth-%E2%80%9C-politically-motivated-crime%E2%80%9D >

| | | |
|---|---|---|
| ஆணைக்குழுவின் முன்னர் பிரசன்னமாகிய போது கேணல் சிறிவர்தன குற்றஞ்சாட்டினார்.[90] | எதிராக மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பகிர்வுப் பத்திரமும் மீளப்பெறப்பட வேண்டும்.<br>கேணல் ஷம்மி அர்ஜுன குமாரரத்னவிற்கு மறுக்கப்பட்ட வெளிநாட்டுச் சேவை வழங்கப்பட வேண்டுமெனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>பொலிஸ் சேவையிலுள்ள பல பிரதிவாதிகளுக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>குறிப்பிட்ட ஒரு குழுவினரை ஊழலுக்கு எதிரான செயற்குழு இலக்குவைத்துள்ளது என விசாரணை ஆணைக்குழு உறுதிபடக் கூறியது. இதன் காரணமாக, இதனையொத்த பொறிமுறைகள் மீள உருவாகாமையை உறுதிப்படுத்த சட்ட ஏற்பாடுகளினை அறிமுகப்படுத்த வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | |

[90] சுல்பிக் பர்ஸான், 'எக்னெலிகொட மீது வாகுமூலம் அளிக்கும்படி CID அதிகாரிகள் அழுத்தம் கொடுத்ததாக கோரும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சாட்சி' இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/08/25/pcoi-witness-claims-cid-officers-pressured-him-to-make-statement-on-ekneligoda/ >

| | | |
|---|---|---|
| | அடிப்படை உரிமைகளையும், நெறிமுறைகளையும் கருத்திலெடுக்காது செயற்பாட்ட குற்றச்சாட்டுக்காக நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கும் (FCID) மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்படல் குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் கருத்திற்கொள்ள வேண்டும். | |

**44. கெய்த் நோயர் கடத்தப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கங்கள் 232/2020, 353/2020, 297/2020, 257/2020, 253/2020, 241/2020, 242/2020, 204/2020, 239/2020, 203/2020 மற்றும் 296/2020**

**முறைப்பாட்டாளர்கள்:**

**ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர**
**பண்டார திஸ்ஸநாயக்க புலத்வத்தை**
**நிஷாந்த ஜயதிலக**
**சமிக்க சுமித்**
**கோப்ரல் நிஷாந்த குமார மற்றும் ஏனையோர்**

| | | |
|---|---|---|
| கெய்த் நோயர் கடத்தப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணையோடு முறைப்பாட்டாளர்கள் தொடர்புபட்டவர்கள். சந்தேக நபர்களைக் கைது செய்வதில் நீடித்த தாமதத்தினை கொண்டமைந்த விசாரணையாக இது அமைகின்றது.[91] போலியான வாக்குமூலத்தினை அளிக்குமாறும்,[92] சாட்சிகளாகத் தோன்றுமாறும்[93] குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளினால் தாங்கள் வலுக்கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் கோரி புலன்விசாரணையுடன் தொடர்புபட்ட பலர் விசாரணை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தனர். | கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முறைப்பாட்டாளருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப்பொறுப்புக்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.<br><br>(முன்னாள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பரிசோதகர் நிஷாநசூத சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் ஏனையோர் உட்பட) வழக்குடன் சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் சாட்சியங்களை சோடித்த குற்றத்திற்காக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட் வேண்டும் என விசாரணை ஆணைக்குழு மேலும் பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் மிகவும் காலந்தாழ்த்தப்பட்ட புலன்விசாரணைகள் மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகள் மீது பின்னடைவினை ஏற்படுத்துவதுடன் புலன்விசாரணைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதிலிருந்து தடுக்கும்.<br><br>தங்களுடைய கடமைகளைப் புரிகின்ற புலன்விசாரணை அதிகாரிகளுக்கு எதிராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், பழிவாங்கல் அச்சத்தினைத் தோற்றுவிக்கின்ற அச்சமூட்டுகின்ற போக்கு அத்தகைய அதிகாரிகள் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலிருந்து தடுக்கும். |

[91] மனெஷ்கா பொறம், 'கெய்த் நொயர் கடத்தல் வழக்கில் முக்கிய கைதினை நோக்கி CID இனை இட்டுச்சென்ற தொலைபேசி பதிவுகள்' இங்கே பார்வையிடலாம் < http://www.sundayobserver.lk/2018/04/15/news-feature/phone-records-lead-cid-big-arrest-keith-noyahr-abduction-case >

[92] சுல்பிக் பர்ஸான், 'லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் CID நீதிமன்றத்தினை தவறாக வழிநடத்தியுள்ளது: முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி' (*NewsFirst.lk*, 28 ஐப்பசி 2020) இங்கே பார்வையிடலாம் < https://www.newsfirst.lk/2020/10/28/cid-misled-court-over-lasantha-wickrematunge-killing-ex-intelligence-officer/ > 17 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[93] Ceylon Today, 'ஊடகவியலாளர் கெய்த் நோயர் கடத்தல் வழக்கு: அரச சாட்சியாக தோன்றும்படி வற்புறுத்தப்பட்டார் - ஓய்வுபெற்ற சார்ஜன்ட் சோமசூரிய' இங்கே பார்வையிடலாம் < https://ceylontoday.lk/news/journalist-keith-noyahr-abduction-case-was-coerced-into-appearing-as-state-witness-rtd-sgt-somasuriya >

| | | |
|---|---|---|
| | இப் புலன்விசாரணையுடன் சம்பந்தப்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மீது தவறாக சிறையிலடைத்தமைக்காக தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 338இன் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். பொலிஸ் சேவையிலுள்ள பிரதிவாதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று, புலன்விசாரணைகளின் போது பொது நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விசாரணை நடத்த வேண்டும். | |
| **45. D.A. ராஜபக்ச அறக்கட்டளையினால் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1885/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**வில்லியம் விஜேசிங்க கமகே** | | |
| இவ் வழக்கு ராஜபக்ச அறக்கட்டளையினால் கம்பஹாவில் காணியொன்று கொள்வனவு | (முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவினுடைய 2010 பாராளுமன்ற | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் மிகவும் காலந்தாழ்த்தப்பட்ட |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டமையுடன் முறைப்பாட்டாளர் சம்பந்தப்பட்டிருக்கின்றமை தொடர்பிலானது. இக் காணியினைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினை முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பதனை நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) புலன்விசாரணை செய்தது.[94] காணியின் விற்பனையினையும் பரிமாற்றத்தினையும் நிறுத்துமாறு கம்பஹா நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.[95] | தேர்தல் பிரச்சாரத்தில் அங்கம் வகித்த) முறைப்பாட்டாளர் வில்லியம் விஜேசிங்க கமகே தொடர்பில் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து குற்றப்பொறுப்புக்களிலுமிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பதுடன், புலன்விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | புலன்விசாரணைகள் மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகள் மீது பின்னடைவினை ஏற்படுத்துவதுடன் புலன்விசாரணைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதிலிருந்து தடுக்கும். |
| **46. மல்வானையிலுள்ள 16 ஏக்கர் காணி தொடர்பிலான புலன்விசாரணைகளுக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 1968/2020**<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**திருக்குமார் நடேசன்** | | |
| மல்வானையிலுள்ள 16 ஏக்கர் காணி தொடர்பிலான புலன்விசாரணை தொடர்பில் | நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) போலியான முறைப்பாடொன்றினை பசில் ராஜபக்சவிற்கு எதிராகப் பதிவு செய்ததினால் | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் நீதித்துறையினதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் செயல் |

[94] Daily Mirror, 'பசிலின் அலுவலகத்தின் மீது FCID கட்டளையினைப் பெற்றது' இங்கே பார்வையிடலாம் < https://www.pressreader.com/sri-lanka/daily-mirror-sri-lanka/20151125/281500750162135 >

[95] மேற்குறிப்பிட்டது

| | | |
|---|---|---|
| முறைப்பாட்டாளர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.[96]<br><br>இக் காணி பொது நிதிகளினைப் பயன்படுத்தி முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் கொள்வனவு செய்யப்பட்டது என நம்பப்பட்டது. காணிக்கான உரித்தினை முன்னாள் அமைச்சர் மறுத்துள்ளார். பணம் தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சருக்கு எதிராக நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் (FCID) பதிவுசெய்யப்பட்ட வழக்கிலுள்ள காணி ஏலத்தில் விடப்பட வேண்டும் என பூகொடை நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி கட்டளையிட்டார்.[97] | உபுல் குமார ராமவிக்கிரமவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. குறித்த போலியானதெனக் கூறப்படுகின்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பூகொடை நீதவான் நீதிமன்றத்தில் குற்றப்பொறுப்புக்களினைப் பதிவு செய்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>கம்பஹா மேல் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள குற்றப்பகர்வுப் பத்திரம் மீளப்பெறப்பட வேண்டும் என விசாரணை ஆணைக்குழு மேலும் பரிந்துரைக்கின்றது. | நடவடிக்கைகளில் இடையூறினை ஏற்படுத்துவதுடன் புலன்விசாரணை அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினையும் சீர்குலைக்கும். |

[96] மஹாநாம விதானகே, ‘திருக்குமார் நடேசன் கைது, பிணை வழங்கப்பட்டது’ (*Daily News*, 18 ஐப்பசி 2016), இங்கே பார்வையிடலாம் < http://www.dailynews.lk/2016/10/18/local/96297 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

[97] ‘நிருபமா ராஜபக்சவின் கணவனை குஊஜருனு கைது செய்தது’ (*Daily Mirror*, 17 ஐப்பசி 2016) இங்கே பார்வையிடலாம் < http://www.dailymirror.lk/117555/www.hsbc.lk > 18 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| 47. கொழும்பு மாநகர சபையின் ஆணையாளரினால் பொதுச்சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்மை தொடர்பிலான புலன்விசாரணைக்கு எதிரான முறைப்பாடு – முறைப்பாட்டு இலக்கம் 956/2020<br><br>**முறைப்பாட்டாளர்:**<br><br>**பத்ராணி ஜயவர்தன** | | |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபையின் ஆணையாளராக இவர் இருந்த போது தேர்தல் பிரச்சாரங்களுக்காக பொது வளங்களினை தவறான முறையில் பயன்படுத்தினர் என்கின்ற குற்றச்சாட்டினடிப்படையில் வேலைக்கு வருகை தருவதனைத் தவிர்க்கும்படி முன்னர் முறைப்பாட்டாளர் தேவைப்படுத்தப்பட்டிருந்தார். கொழும்பு மாநகர சபை ஊழியர்களை திணைக்களங்களுக்கு இடையிலான இடமாற்றல் செய்ததன் மூலம் தேர்தல் சட்டங்களை ஆணையாளர் மீறியுள்ளார் என கொழும்பு நகரபிதா A.J.M. முஸாம்மில் தெரிவித்திருந்தார்.[98] | முறைப்பாட்டாளர் பத்ராணி ஜயவர்தன கொழும்பு மாநகர சபைக்கு வேலைக்கு சமூகமளிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்பதோடு, அவருடைய ஓய்வுக்கால நன்மைகளும் மீளளிக்கப்பட வேண்டுமென விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் பொதுச் சேவையின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

[98] யொஹுபன் பெரேரா மற்றும் ஜெஹுான் குணசேகர 'தேர்தலுக்கு முன்னதான யுத்தப் பாதையில் முஸம்மில்' (*Daily Mirror*, 23 மார்கழி 2014) இங்கே பார்வையிடலாம் < https://www.pressreader.com/sri-lanka/daily-mirror-sri-lanka/20141223/281672548296648 > 19 மாசி 2021 அன்று அணுகப்பட்டது

| | | |
|---|---|---|
| **48. பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பல பொது அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிரான முறைப்பாடுகள் - முறைப்பாட்டு இலக்கங்கள் 571/2020, 434/2020, 1871/2020, 950/2020, 1140/2020, 1141/2020, 60/2020, 555/2020, 551/2020, 554/2020, 274/2020, 1320/2020, 610/2020 மற்றும் 567/2020**<br><br>**முறைப்பாட்டாளர்கள்:**<br><br>**ரோஹன பிரதீப் ஜயசூரிய**<br>**நிமால்சிறி லக்ஷ்மன்**<br>**அஜித் புஷ்பகுமார**<br>**பிரியந்த குணதிலக பண்டார மற்றும் ஏனையோர்** | | |
| பொது வழங்களினை துஷ்பிரயோகம் செய்தமை, அரசியல் நோக்கத்துடனான செயற்பாடுகள், மற்றும் நிதி முறைகேடுகள் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொது அல்லது பொலிஸ் சேவையிலிருந்து முன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பல அதிகாரிகள் முறைப்பாட்டாளர்களாக உள்ளனர். | பொது வழங்களினை துஷ்பிரயோகம் செய்தமை, அரசியல் நோக்கத்துடனான செயற்பாடுகள், மற்றும் நிதி முறைகேடுகள் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொது அல்லது பொலிஸ் சேவையிலிருந்து முன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பல அதிகாரிகளை பதவியில் மீளமர்த்த வேண்டுமென்றும் நட்டஈடு வழங்க வேண்டுமென்றும் விசாரணை ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. | இப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் பொதுச் சேவையினதும் புலன்விசாரணை அதிகாரிகளினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். |

## விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலான உட்கிடைகளும் கரிசணைகளும்

விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமாயின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிய செயல்முறை மற்றும் நியாயமான வழக்காடல் உரிமைகளின் அவமதிப்புக்கு இட்டுச்செல்லும் என்பதோடு, நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற வேறு பல நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும். பழிவாங்கல் அச்சத்தின் காரணமாக சாட்சிகள் முன்வருவதிலிருந்து பின்னிற்க வைப்பதோடு அரசியல் கூருணர்வுள்ளவை எனக் கருதப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடரலிலுள்ள அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து அதிகாரிகளினைத் தடுக்கின்ற முன்னுதாரணம் ஒன்றினை இப் பரிந்துரைகள் தோற்றுவிக்கும். முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற பொறுப்புக்கூறல் செயல்முறைகள் மீது நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடிய உட்கிடைகள் இவ் ஆணைக்குழுவின் கொண்டிருக்கலாம். அத்தோடு, நீண்ட காலத்திற்கு தாமதப்படுத்தப்பட்டுள்ள புலன்விசாரணைகள் மற்றும் சட்ட செயல் நடவடிக்கைகள் மீது மேலும் பின்னடைவினை ஏற்படுத்துவதோடு இலங்கையில் தண்டனையிலிருந்தான விலக்களிப்பினை மேலும் வேரூன்றச்செய்யும்.

விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உருப்படிகள் 9 மற்றும் 10இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான தீர்மானத்தினைக் கோரி பிரேரணை ஒன்றினை பிரதமர் மகிந்த ராஜபக்ச 9 சித்திரை 2021 அன்று பாராளுமன்றத்தில் முன்வைத்தார். மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஊழல் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பிலான அடையாளமயமான வழக்குகள் மற்றும் புலன்விசாரணைகள் மீதான பரிந்துரைகளினை உருப்படிகள் 9 மற்றும் 10 உள்ளடக்கியுள்ளன. இப் பிரேரணை பிரதமரினால் பாராளுமன்றத்தில் இவ் வாரம் நகர்த்தப்படுவதற்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

உருப்படி 9இலுள்ள, முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை ஆணைக்குழுவனால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் பரிந்துரைகளையும், அவற்றினை அமுல்படுத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபர், தொடர்புடைய அமைச்சுகளுக்கு பொறுப்பான அமைச்சர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சாற்றுதல் செய்வதற்காக பாராளுமன்றத்தின் அனுமதியினை இத் தீர்மானம் வேண்டுகின்றது. இவ் வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள புலன்விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள், சாட்சிகள் மற்றும் ஏனையோருக்கு எதிராக சட்ட செயல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், நீதிமன்றத்தில் தற்போது நிலுவையிலுள்ள பல வழக்குகளை தள்ளுபடி செய்யவும் அனுமதி வேண்டுகின்றது. இத் தீர்மானம் பாரளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாயின் அது நீதித்துறையினதும் சட்டவாட்சியினதும் சுயாதீனத்தன்மையினை சீர்குலைக்கும்.

அத்தகைய தனிநபர்களினதும் நிறுவனங்களினதும் சட்டவாட்சியனை நிலைநிறுத்துவதற்கான ஆற்றலினை சீர்குலைக்கின்ற வகையில் தனிநபர்களையும் நிறுவனங்களையும் இலக்குவைக்கும் நோக்கிலான பொறிமுறையொன்றிற்கான நிறுவன ரீதியான வரைச்சட்டத்தினை வழங்குகின்ற விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உருவாக்கத்துடன் இக் கரிசணைகள் மேலும் வலுவடைந்துள்ளன. விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உருப்படி 8இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல் குற்றத்தின் கீழ் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நபர்கள் மீது சமூக இயலாமையினை விதிப்பதற்குப் பரிந்துரைப்பதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு வலுவூட்டப்பட்டுள்ளது. விசாரணை ஆணைக்குழுவானது வெறுமனே தரவுகளைக் கண்டறிகின்ற ஒரு அமைப்பாக இருக்கின்ற போதிலும், குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீது மிகவும் பரந்துபட்ட தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அதிகாரங்களினை விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு கொண்டுள்ளது. விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பிலான கரிசணைகளை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கீழே சுருக்கமாகக் கலந்துரையாடுகின்றது.

## பிரிவு 2 - விசாரணை ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

பிரிவு 2 விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் சட்ட வரைச்சட்டத்தினை உருக்கோடிட்டுக் காட்டுவதுடன் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீதான அவற்றினுடைய பரிந்துரைகளின் உட்கிடைகளினைத் தெளிவுபடுத்த கலந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பிலான சுருக்கமான விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. சித்திரை 2021இல் நீடிக்கப்பட்ட தற்போதைய ஆணைக்குழுவின் ஆணை பற்றிய கண்ணோட்டம் ஒன்றினையும் இப் பிரிவு உள்ளடக்கியுள்ளது.

### சட்ட வரைச்சட்டமும் அதனோடு தொடர்புடைய விடயங்களும்

#### 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம்

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டவரைபு 30 தை 1978 அன்று தேசிய அரசுப் பேரவையில் முன்வைக்கப்பட்டு, 2 மாசி 1978 அன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டது. ''தேசிய அக்கறையின் காரணமாக அவசரமானது'' என இச் சட்டவரைபு வகைப்படுத்தப்பட்டு தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சி நிரல் பத்திரத்தில் 7 நாட்கள் இருக்க வேண்டும் என்கின்ற அரசியலமைப்பு தேவைப்பாட்டினை மீறியதுடன் பொது மக்களின் ஈடுபாட்டினையும் தவிர்த்து தேவையற்ற அவசரத்துடன் நிறைவேற்றப்பட்டது.[99]

[99] இலங்கை குடியியல் உரிமைகள் இயக்கம், துரிதமான சட்டவாக்கம் மற்றும் மக்களின் உரிமைகள் பற்றிய கூற்று (19 மாசி 1978)

இச் சட்டத்தின் பிரிவு 2இன் படி அவருடைய கருத்தின் படி ஏதேனும் பொது நிறுவனங்கள் உள்ளூர் அமைப்புக்களின் நிர்வாகம், ஏதேனும் சட்ட நிர்வாகம் அல்லது நீதி வழங்கல் அல்லது பொது அக்கறை, பாதுகாப்பு, நலன் போன்ற ஏதேனும் விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தகவல் பெறல் அவசியமென்று சனாதிபதி நினைக்கின்ற போது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படலாம்.

இச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரங்கள்/தத்துவங்கள் இச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. (அ) ஆணைக்குழு அவசியமென்று கருதுகின்ற போது சாட்சியங்களினை வாங்கிக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும், மற்றும் சாட்சிகளை பரீட்சிக்கவும்
   (ஆ) எந்தவொரு சாட்சியினதும் சாட்சியத்தினை சத்தியப்பிரமாணத்தின் கீழ் அல்லது உறுதியேற்பின் கீழ் வழங்குமாறு தேவைப்படுத்தவும், அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்கும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியேற்பினை செய்ய அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் செய்விக்க
   (இ) சாட்சியமளிக்க அல்லது அல்லது அவரது உடமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தினை அல்லது பொருளை எவரேனும் நபரை ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்க, மற்றும் சாட்சியாக அவரை பரீட்சிக்க அல்லது அவரது உடமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தினை அல்லது பொருளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்த
   (ஈ) சான்று கட்டளைச்சட்டத்தின் அல்லது ஏனைய பிற எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நீதிமன்றத்திலுள்ள குடியியல் அல்லது குற்றவியல் செயல் நடவடிக்கைகளில் ஏற்கப்பட் முடியாத சாட்சியங்களையும் ஏற்க
   (உ) ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் வழிப்படுத்லுக்கு அமைவாக பொதுமக்களையும் பத்திரிகைகளையும் விசாரணைகளுக்கு அனுமதிக்க அல்லது மறுக்க
   (ஊ) விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள அல்லது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள விடயத்தில் ஏதேனும் விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள எவரேனும் நபருக்கு இவ் விசாரணையின் நிமித்தம் ஏற்பட்ட செலவு மற்றும் செலவீனத்திற்கான ஆணைக்குழு நியாாமானதெனக் கருதுகின்ற பணத்தினை வழங்குமாறு பரிந்துரைக்க

2. ஆணைக்குழு கோரிக்கை விடுக்குமாயின், இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றிற்கு ஆணைப்பத்திரத்தில் திருத்தத்தினை மேற்கொள்வதன் மூலம் சனாதிபதியினால் கீழ்வரும் அனைத்து அல்லது ஏதேனும் அதிகாரங்களை அளிக்கமுடியும்,
   (அ) விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள எவரேனும் நபரின் ஏதேனும் பணப்பரிமாற்றம் தொடர்பான பதிவுகளைக் கொண்டுள்ள வங்கியின் அல்லது

நிறுவனத்தின் ஏதேனும் புத்தகம் அல்லது ஆவணத்தினை சமர்ப்பிக்குமாறு ஏதேனும் வங்கியின் அல்லது கடன் வழங்கும் நிறுவனத்தின் முகாமையாளருக்கு அல்லது ஏதேனும் அதிகாரிக்கு எழுத்து மூலமான அறிவித்தலின் மூலம் தேவைப்படுத்த

(ஆ) விசாரணையின் விடயப்பொருளாக அவரது நடத்தையுள்ள எவரேனும் நபரின் தொடர்பிலான அத்தகைய அதிகாரியிடமுள்ள தகவல்களை வழங்கும்படி இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு அல்லது செலாவணி பரிவாத்தனைக் கட்டுப்பாட்டாளர் அல்லது ஏதேனும் தொடர்புடைய அதிகாரிக்கு எழுத்து மூலமான அறிவித்தலின் மூலம் தேவைப்படுத்த

(இ) ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்ற கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அத்தகைய நபரின் ஏதேனும் கணக்கிலுள்ள, எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நியாயமான பண மீழப்பெறல் தவிர்ந்த, ஏதேனும் நிதிகளின் பண மீழப்பெறலினை அனுமதிப்பதிலிருந்து எழுத்து மூலமான கட்டளையின் மூலம் ஏதேனும் வங்கியின் முகாமையாளரை தடுப்பதற்கு

(ஈ) நபரொருவரின் சாட்சியம் அல்லது ஏதேனும் விசாரணையில் அவரது பிரசன்னம் அவசியமானதாக உள்ள போது அத்தகைய எதேனும் நபரின் கடவுச்சீட்டு மற்றும் ஏனைய பிரயாண ஆவணங்களினை அத்தகைய கட்டளை மீளப்பெறப்படும்வரை பறிமுதல் செய்யுமாறு எழுத்து மூலமான கட்டளையின் மூலம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரைத் தேவைப்படுத்த

(உ) நபரொருவரின் சாட்சியம் அல்லது ஏதேனும் விசாரணையில் அவரது பிரசன்னம் அவசியமானதாக உள்ள போது அத்தகைய நபர் நாட்டை விட்டு வெளியேறுவதனைத் தடுப்பதற்கு அவசியமான படிமுறைகளை அத்தகைய கட்டளை மீளப்பெறப்படும்வரை முன்னெடுக்குமாறு எழுத்து மூலமான கட்டளையின் மூலம் எவரேனும் பொலிஸ் அதிகாரியைத் தேவைப்படுத்த

(ஊ) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய அதிகாரசபையின் உடமையில் இருக்கின்ற ஏதேனும் செய்திகள் தொடர்பான பதிவுகளைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் புத்தகம் அல்லது ஆவணத்தினை வழங்குமாறு எழுத்து மூலமான கட்டளையின் மூலம் எவரேனும் தொலைத்தொடர்பு அதிகாரசபை அல்லது அதிகாரியைத் தேவைப்படுத்த

3. சான்றாதார வரையறையின் நோக்கெல்லையினுள் உள்ள விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் பிரதிநிதித்துவத்திற்கு அழைப்புவிடுப்பதற்கான அதிகாரத்தினையும் அத்தகைய பிரதிநிதித்துவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தவும் அறிக்கையிடவும் ஆணைக்குழு அதிகாரத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

4. உபபிரிவு (1)இன் கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரத்தினை இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு பிரயோகிக்கலாம். அத்தோடு, அத்தகைய அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற போது ஆணைக்குழ ஏதேனும் நெறிப்படுத்தல்களை எவரேனும் நபருக்கு வழங்குகின்ற போது ஏனைய வேறு சட்டங்களில் அதற்கு முரணாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அந் நெறிப்படுத்தல்களை நிறைவேற்ற வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் ஏதேனும் நீதிமன்றம், நியாயசபை, பொது நிறுவனம் தொடர்பில், அல்லது ஏதேனும் சட்டத்தினை நிர்வகித்தில் தொடர்பில் ஏதேனும் அரசியல் பழிவாங்கல், அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தமை அல்லது தவறாகப் பயன்படுத்தியமை, ஊழல் அல்லது ஏனைய மோசடி நடவடிக்கைகளில் குற்றவாளியென அதனுடைய விசாரணையிறும் சனாதிபதிக்கு வழங்கிய அறிக்கையிலும் அடையாளங்காணப்பட்ட நபருக்கு எதிராக சமூக இயலாமையினை பரிந்துரைப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆதலால், சனாதிபதி அத்தகைய கண்டறிதல்களைவ வர்த்தமானியில் வெளியிட வேண்டும். அத்தோடு அத்தகைய அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

சமூக இயலாமை, நபரொருவரை வாக்காளராக இருப்பதிலிருந்தும் வாக்களிப்பதிலிருந்தும், அல்லது (சனாதிபதி, பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்ற) தேர்தல்களில் வேட்பாளராக நியமிக்கப்படுவதிலிருந்தும், மற்றும் பொது அதிகாரியாக பணியில் அமர்த்தப்படுவதிலிருந்தும் அல்லது பதவியொன்றினை வகிப்பதிலிருந்தும் தகுதிநீக்கம் செய்கின்றது.[100]

சட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவின் அறிக்கை, கண்டறிதல்கள் அல்லது பரிந்துரைகள் இறுதியானவையும் முடிவானவையும் ஆகும். ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்கு உட்படுத்தப்படமுடியாது என்பதனைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.[101] எவ்வாறிருப்பினும், விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பிலான பல்வேறு கடந்தகால முன்னெடுப்புக்களின் பரிந்துரைகள் நீதிமன்றங்களினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பிலான கடந்தகால முன்னெடுப்புக்கள்

1. திருமதி S. பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகளை இல்லாதாக்கல் தொடர்பிலான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

திருமதி பண்டாரநாயக்க அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் தவறான பயன்படுத்துகை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக குற்றப்பொறுப்புச் சுமத்தப்பட்டு, 1978ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னர் அழைக்கப்பட்டார்.[102]

[100] பிரிவு 9(3)
[101] பிரிவு 9(2)
[102] Daily News, 'சிறிமாவோவின் வலிந்து நாடுகடத்தப்படல்' இங்கே பார்வையிடலாம் < https://www.dailynews.lk/2017/12/13/features/137180/sirimavo%E2%80%99s-enforced-exile >

மேன்முறையீட்டு நீதிமன்றம் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு எதிராக, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டம் அதனுடைய பணிகள் தொடர்பில் கடந்தகாலத்தினை உள்ளடக்கும் பயனுடையனவானது அல்ல, ஆதலால் அச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முந்திய காலப்பகுதி தொடர்பான விசாரணை அதனுடைய நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டது எனக் கூறி தடைவிதிக்கும் நீதிப்பேராணை ஒன்றினை வழங்கியது. எவ்வாறிருப்பினும், கடந்தகாலத்தினை உள்ளடக்கும் பயனுடையனவான விறைவுடைய இரு திருத்தச்சட்டங்கள் மூலம் இது தவிர்க்கப்பட்டதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு வெற்றானதும் வெறிதானதுமென பிரகடனப்படுத்தும் முன்னெப்போதும் நிகழாத நடவடிக்கைகள் பாராளுமன்றத்தினால் எடுக்கப்பட்டது. விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதோடு, அதன் விளைவாக சமூக இயலாமை விதிக்கப்பட்டதோடு 1980ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.[103]

இவர் வெளியேற்றப்பட்ட மறுநாள் பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் மற்றும் சனாதிபதி தேர்தல்கள் சட்டம் தொடர்பில் இரு சடுதியான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ‘‘தீர்மானமொன்றின் மூலம் தகுதி இழக்கச்செய்யப்பட்ட எவரேனும் நபர் இயலாமை காலப்பகுதியில் பாராளுமன்ற (மற்றும் சனாதிபதி) தேர்தலில் ஏதேனும் விதத்தில் பங்கேற்பதிலிருந்து’’ இத் திருத்தங்கள் தடை செய்வதோடு, இத் தடை விதிப்பிற்கு முரணாக செயற்படுவது ஆறு மாத காலம் வரையான சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படக்கூடிய குற்றமாகும்.[104]

‘‘சமூக இயலாமைக்கு, குடியியல் உரிமைகளை இழப்பதற்கு குடிமகன் ஒருவனை உட்படுத்துவது அவருக்கு அரசியல் மரணத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது எனக் கூறலாம்’’ எனவும், நீதித்துறையில் அரசியல் இடையீடு ஏற்படுத்துகின்ற ‘‘நீதித்துறையினது சுயாதீனத்தன்மை மற்றும் நீதிச் சுதந்திரம் மீது கணக்கிடமுடியாத பாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ள செயல் எமது சட்டவாக்க வரலாற்றில் ஒரு அவமானம் மிக்க அத்தியாயம்’’ என கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா தெரிவித்தார்.[105]

இலங்கை குடியியல் இயக்கத்தின் தலைவர் பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க அப்போதைய சனாதிபதி J.R. ஜயவர்தனவிற்கு எழுதிய கடிதத்தில் திருமதி பண்டாரநாயக்கவினை ‘‘விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இயலாமைக்கு உட்படுத்துவது உயிர்த்துடிப்புள்ள சனநாயகத்தின் அடிப்படையான அடித்தளங்களில் ஒன்றினை சீர்குலைக்கும்’’ என எழுதினார். ‘‘விசேட சனாதிபதி விசாரணை

---

103 மேற்குறிப்பிட்டது

104 இலங்கை குடியியல் உரிமைகள் இயக்கம், ‘சனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் பங்கேற்பதனைத் தடுக்கும் ஆச்சரியமான திருத்தங்கள்’ (2 கார்த்திகை 1980)

105 Sunday Observer, சிறிமாவோ பண்டாரநாயக்க மீதான சமூக இயலாமை விதிப்பு: ஒரு பாரதூரமான அரசியல் தவறு’ இங்கே பார்வையிடலாம் <http://archives.sundayobserver.lk/2004/10/10/fea26.html>

ஆணைக்குழுவினுடைய செயல் நடவடிக்கைகள் நியாயமானதும் பக்கச்சார்பற்றதுமான நீதிச் செயல்முறை என விபரிக்கப்பட முடியாதவை''[106] எனவும் எழுதினார்.

**2. குறிப்பிட்ட அரசாங்க நிறுவனங்களில் நிலவிய ஒழுங்கீனமான செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு 1995ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு.**

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 9(1)இன் கீழ் அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தமை அல்லது தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் பிரதிவாதி டெனஹந்தி விஜயபால ஹெக்டர் மெண்டிஸ் குற்றவாளி என குறிப்பிட்ட அரசாங்க நிறுவனங்களில் நிலவிய ஒழுங்கீனமான செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு 1995ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தீர்மானித்ததோடு, மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் அவர் சமூக இயலாமைக்கும் உட்படுத்தப்பட வேண்டுமெனவும் பரிந்துரைத்தது.[107] விஜயபால மெண்டிஸ் எதிர் P.R.P. பெரேரா வழக்கில் உயர் நீதிமன்றம் சமூக இயலாமையை சுமத்துதல் தொடர்பான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரை எதேச்சையானதும் நியாயமற்றதுமென கண்டறிந்தது.

**3. லலித் அத்துலத்முதலி மற்றும் விஜய குமாரதுங்க படுகொலை செய்யப்பட்டது தொடர்பிலான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு.**

நியாயமான வழக்காடல் விதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு ஏனையோரின் குற்றத்தினைத் தீர்மானிப்பதில் தனிப்பட்ட பகைமை உணர்வுடன் செயற்பட்டவர்களின் சாட்சியங்களினைப் பெற்றுக்கொண்டது. இரண்டாம் மூன்றாம் நபர்களுக்கு மீண்டும் மீண்டும் ஒப்புவிக்கப்பட்ட கூற்றுக்கள்கூட கேள்விக்குட்படுத்த முடியாத சாட்சியங்களாக கையாளப்பட்டன.

அவர்கள் நோக்கத்தினைக் கொண்டிருக்கலாம் என்ற காரணத்தினால் தொடர்புபடுத்தப்பட்டவர்களுக்கு எதிராக முகத்தோற்ற அளவிலான வழக்கு தாபிக்கப்பட்டுள்ளது என்ற ஆணையாளர்களின் முடிவுகளை முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி A.C. அலெஸ் நிராகரித்தார். நீதிபதி அலெஸினால் சுட்டிக்காட்டப்பட்டபடி 'நோக்கத்தின் காரணமாக குற்றவாளி' என்பது தாபிக்கப்பட்ட 'குற்றவியல் சட்ட கோட்பாடுகளுக்கு முற்றுமுழுதாகப் புறம்பானது'.

---

[106] பேராயர் லக்ஷமன் விக்கிரமசிங்கவினால் சனாதிபதி J.R. ஜயவர்தனவிற்கு எழுதப்பட்ட கடிதம் 14 ஐப்பசி 1980 மறைந்த பேராயர் லக்ஷமன் விக்கிரமசிங்கவின் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்தாக்கங்களிலிருந்து, குருணாகலை ரோயர், இலங்கை சிவில் உரிமைகள் இயக்கத்தின் தலைவர், சி.உ.இயக்கத்தினால் 10 மார்கழி 1983 மனித உரிமைகள் தினத்தில் வெளியிடப்பட்டது

[107] *விஜயபால மெண்டிஸ் எதிர் P.R.P. பெரேரா* [1999] 2 SriLR 110, பக்கம் 119 இங்கே பார்வையிடலாம் < https://www.lawnet.gov.lk/wp-content/uploads/2016/11/014-SLLR-SLLR-1999-V-2-WIJAYAPALA-MENDIS-v.-P.-R.-P.-PERERA-AND-OTHERS.pdf >

‘பிரதானமான பேரழிவுகள் தொடர்பான உண்மையினை வெளிக்கொணர்ந்து குற்றவாளிகளை பொறுப்புக்கூறச் செய்வதனை விட உண்மையினை ஒடுக்குவதிலேயே இதனுடைய செயற்பாடுகள் அதிகமாக இருக்கின்ற அளவுக்கு சட்ட செயல்முறை தரங்குறைக்கப்பட்டுள்ளது’[108] என விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கண்டறிதல்கள் பற்றி சிந்திக்கின்ற போது “இலங்கை: அதிகாரத்தின் செருக்கு, அழிவு நிலை மற்றும் கொலை” நூலின் எழுத்தாளர், கல்வியலாளர் ராஜன் ஹூல் அவதானமொன்றினை மேற்கொண்டார்.

## அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணை

அரசியல் பழிவாங்கல் தொடர்பான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (SPCoI) 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் நியமிக்கப்பட்டது.[109] விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆரம்பத்தில் மதிப்பிற்குரிய உயர்திரு தம்மிக்க பிரியந்த சமரக்கோன் (உயர் நீதிமன்ற நீதிபதி), மதிப்பிற்குரிய ஹேமா குமுதினி விக்கிரமசிங்க (உயர் நீதிமன்ற நீதிபதி) மற்றும் மதிப்பிற்குரிய ரத்னபிரிய குருசிங்க (மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி) ஆகியோரைக் கொண்டமைந்திருந்தது. நீதிபதி ரத்னபிரிய குருசிங்கவின் பதவி விலகலைத் தொடர்ந்து நீதிபதி சோபித ராஜகருணா ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.[110]

அரசியல் பழிவாங்கல் தொடர்பான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளினை அமுல்படுத்துவதற்கான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணை கீழ்வருமாறு.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினுடைய (ஊழலுக்கு எதிரான செயற்குழு தொடர்பிலான) உருப்படி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள்,

---

[108] ‘விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உண்மையான இடர்கள்’ (*Sunday Times*, 8 மார்கழி 2019) இங்கே பார்வையிடலாம் < https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20191208/281994674365356 >

[109] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_E.pdf >

[110] 19 மாசி 2021 தேதியிடப்பட்ட 2215/59 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/2/2215-59_T.pdf >

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளை, குறித்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த சத்தியப்பிரமாணத்தினை அழிக்கும் விதமாக, மீறியிருந்தால்
2. அதிகார துஷ்பிரயோகம் அல்லது தவறாகப் பயன்படுத்தல், குறுக்கீடு, மோசடி, ஊழல், குற்றவியல் துஷ்பிரயோகம், குற்றவியல் நம்பிக்கை மீறல் அல்லது குடும்ப ஆட்சி என்பவற்றில் ஈடுபட்டிருந்தால்
3. எவரேனுக்கும் எதிராக அரசியல் பழிவாங்கலினை மேற்கொண்டிருந்தால்
4.

அ) நியமனம் அல்லது இடமாற்றல் ஒன்றினை மேற்கொள்ளுகின்ற போது

ஆ) பதவி உயர்வினை வழங்குகின்ற போது

இ) ஏதேனும் விதமான ஒழுங்கீனத்தின் காரணமாக எவரேனையும் பதவி நீக்குகின்ற போது

ஈ) ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களை மீறுகின்ற போது[111]

புலன்விசாரணை செய்வதற்கான ஆணையினை விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள ஒழுங்கீனமான செயல்களில் பிரதிவாதிகள் ஈடுபட்டிருந்தால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 81இன் ஏற்பாடுகள் மற்றும் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு, 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 9இற்கு அமைவாக அத்தகைய நபர் சமூக இயலாமைக்கு உட்படுத்தப்பட வேண்டுமா என்பது தொடர்பில் பரிந்துரைக்க

அவசியமான புலன்விசாரணைகளை நடத்துவதற்கும் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் இறுதி அறிக்கை அல்லது இடைக்கால அறிக்கைகளை சனாதிபதிக்கு அனுப்புவதற்கும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் விழிப்புணர்வின்றி ஏதேனும் விசாரணைகளை அல்லது புலன்விசாரணைகளை நடத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து அரசாங்க அதிகாரிகள், நியதிச் சட்ட சபைகளின் அதிகாரிகள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு உதவியினைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது அனைத்து இயலுமான உதவியினையும் தகவல்களையும் வழங்குமாறு நிறுவனங்கள் நெறிப்படுத்தப்படலாம்.

[111] 29 தை 2021 தேதியிடப்பட்ட 2212/53 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/1/2212-53_T.pdf >

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14இன் பிரகாரம் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அனைத்து சாட்சிகளும் வழக்குத்தொடரலிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

1 சித்திரை 2021 தேதியிடப்பட்ட 2221/54 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ்

"உங்களால் விசாரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டிய விடயங்களின் குறிப்பிட்ட விசேடத்துவத்திற்கு பாதகமின்றி, 2021 தை 29 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2212/53 ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேட) அடங்கியுள்ளவாறு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆரம்ப செயலாற்று நியதிகளின் 1ஆம் இலக்க விடயத்திற்கமைய, அத்துடன் அதற்கு மேலதிகமாக, அவ் அறிக்கையில் இனங்காணப்பட்ட அனைத்து ஆட்கள் தொடர்பாகவும் சொல்லப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் கண்டறிதல்கள், தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் நியாயமானவையா எனபதையும் அத்துடன் அவை அனைத்தும் அல்லது அவற்றுள் ஏதேனும் அமுல்படுத்தப்பட அல்லது அமுல்படுத்துவிக்க அல்லது வேறு வகையில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பதையும், நீங்கள் பொருத்தமானதென கருதும் வகையில் மேற்போந்த அறிக்கையிலேயே உள்ள உள்ளடக்கத்தின் விபரமான பரிசீரனை மற்றும் விரிவான ஆராய்வுக்கு மாத்திரம் உங்களுடைய விசாரணையை மட்டுப்படுத்தி, இத்திருத்தப்பட்ட செயலாற்று நியதிகளில் அத்துடன் அதனுள் அல்லது அதற்கான மாற்றீடுகளில் இருந்து எழுகின்ற ஏதேனும் விடயங்கள் தொடர்பாக ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது பொதுவான விசாரணைகள் நடாத்துவது அல்லது மேலும் விசாரணை நடாத்துவது அவசியமானது என நீங்கள் கருவீர்களாயின், அவ்வாறு நீங்கள் பொருத்தமானதென கருதும் பொதுவான அல்லது குறிப்பான விசாணையை நடாத்துவதற்கும்"[112]

எனத் தெரிவிக்கின்ற உருப்படி 2இனை உட்சேர்ப்பதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணை திருத்தப்பட்டது.

[112] 1 சித்திரை 2021 தேதியிடப்பட்ட 2221/54 இலக்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல், இங்கே பார்வையிடலாம் < http://www.documents.gov.lk/files/egz/2021/4/2221-54_T.pdf >

## முடிவுரை

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவினதும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினதும் அடிப்படையான சிக்கல்களையும் உட்கிடைகளையும் சுருக்கமாக விளக்குவதற்காக கடந்தகால முன்னெடுப்புகளை மேற்கோள் காட்டி விசாரணை ஆணைக்குழுவினதும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினதும் பின்னணியினையும் சட்ட வரைச்சட்டத்தினையும் மாற்றுக்கொற்கைகளுக்கான நிலையம் இக் கருத்துரையில் உருக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டார்கள் எனக் கோருகின்ற தனிநபர்களுக்கான சட்டப் பாதுகாப்பின் அணுக்கத்தின் முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை அத்தகைய பாதுகாப்புக்கள் பொறுப்புக்கூறலினையும் நீதியினையும் அடைவதற்கான எத்தனிப்புக்களை தடை செய்வதற்கான கருவிகளாக மாற்றியமைக்கப்பட்டுவிடக்கூடாது என்பதனை உறுதிசெய்வதற்கு தற்போது வழக்கிலுள்ள சட்ட வரைச்சட்டத்தின் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பிற்கான தேவை இருப்பது புலனாகின்றது. விசாரணை ஆணைக்குழுவின் ஆணையும் கண்டறிதல்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகம் உட்பட்ட பல்வேறுபட்ட தரப்புகளினால் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதனையும் மாற்றுக்கொற்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டுகின்றது.

விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பிலான முன்னேற்றத்தன்மையை மாற்றுக்கொற்கைகளுக்கான நிலையம் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினது செயல் நடவடிக்கைகள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட விபரங்களே பொது வெளியில் கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ளது. அரசியல்மயப்படுத்தப்படல் மற்றும் வெளிப்படையற்றதன்மை குற்றச்சாட்டுக்களின் காரணமாக செயல் நடவடிக்கைகள் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. இதனுடைய ஆணை மற்றும் இது கொண்டிருக்கக்கூடிய கணிசமான உட்கிடைகளினையும் கருத்திற்கொண்டு இத்தகைய பொறிமுறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவம் பற்றி மாற்றுக்கொற்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது.

இறுதியாக, தற்போதைய கருத்துரையில் கலந்துரையாடப்பட்ட செயல்முறைகள் மற்றும் இலங்கையின் சட்டவாட்சி மீதான அதனுடைய உட்கிடைகள் தொடர்பிலான அதனுடைய கரிசணைகளை மாற்றுக்கொற்கைகளுக்கான நிலையம் வலியுறுத்திக்கூறுகின்றது. விசாரணை ஆணைக்குழுவினது பரிந்துரைகள் கொண்டிருக்கக்கூடிய சாத்தியமான தாக்கம் பற்றி இக் கருத்துரை சுட்டிக்காட்டுகின்றது. பாராளுமன்றத்தில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் மற்றும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்படக்கூடிய படிமுறைகள் உள்ளடங்கலாக அடுத்த படிமுறைகள்

தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். ஏற்கனவே அதிகாரம் மிக்க நிர்வாகத்துறை வலுப்படுத்துவதில், புலன் விசாரணைகள் மற்றும் நீதி செயல் நடவடிக்கைகள் சீர்குலைப்பதில் மற்றும் இலங்கையிலுள்ள நிறுவனங்களிலும் செயல்முறைகளிலும் நம்பிக்கையற்றதன்மையினை ஏற்படுத்துவதில் இவ் அனைத்து ஏற்பாடுகளும் கணிசமான உட்கிடைகளைக் கொண்டிருக்கலாம். இலங்கையில் சனநாயக வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்கின்ற ஏதெனும் செயல்களை அதிகமான அளவில் கூர்ந்தாராய்தல், விவாதித்தல் மற்றும் சவாலுக்குட்படுத்தல் அத்தியாவசியமானதாகும்.